கலா நிலயம்

V7. No.49. 13.12.1934.

19199

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 7.] 1934 ஞு டிசம்பர் மீ 13 உ [No. 49

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 769
2. கம்பராமாயணம் (அரசியற் படலம்)
T. N. சேஷாசலம் B.A., B.L. 771
3. இரத்நாவளி (அங்கம் 4. களம் 1, 2.)
வடமொழி நாடக மொழிபெயர்ப்பு 774
4. நம்மாழ்வார் வைபவம் (7-ம் பத்து, 2-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L. 776
5. தமிழ்ப்பாடம் — (இலக்கணம்) 778
6. தருமன் மாண்பு.
K. T. விஜயராகவாசாரியார் B.A. 779
7. சூளாமணி (இரதநூபுரச் சருக்கம்)
வித்துவான்
T. P. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை M.A., B.L. 781
8. அண்டங்கள்.
E. T. இராஜேஸ்வரி அம்மாள் M.A., L.T. 782
9. வர்த்தமானம் 784

கலாநிலயம்

இருவரே எண்மராவார்.

மக்கள் இன்றுபடுகின்ற துன்பங்கள் எத்தனையோ பல; அதனைப்பற்றி யாதும் ஐயமில்லை. மற்று, மனிதரைத்துன்பப்படுத்துவது எதுஎன்பதைச் சிந்தித்திருக்கின்றார்களோ என்பதுதான் ஐயம்பெரிதுடையவோர் செய்தியா யிருக்கின்றது. தனித்தனி நேர்கிற துயரங்கள் எவையாயினும், பொதுவிற்பேசுமிடத்து, அரசியல் முறைகளும், பொருளாதார நிலைகளும், அன்பில்லாமையால் விளைகின்ற அதருமச் செய்கைகளும், சுகாதாரத்திட்டங்களும் இவையனைய பிறவுமே மனிதர்எங்கும் என்றும் இன்புற்றுவாழ்வதற்கு இடையூறுகளாயிருக்கின்றன வென்றென்று எத்திசையிலும் இயம்பக் கேட்கின்றோம். தற்காலம் தலைவர்களா யிருக்கின்றவர்களும் அவர்களைச் சார்ந்து போதிக்கும் வர்த்தமானப் பத்திரிகைகளும் புகுந்து செய்யும் பிரசாரங்களால் பெருகுகின்ற பேச்சுக்கள் இவை. பத்துப்பேர் ஒன்றுகூறிவிட்டால், பத்திரிகையிலும் அது வந்துவிட்டால், பிறகு நம் ஜனங்களின் மனங்கள் பாய்கின்ற வேகத்தைக் கேட்கவேண்டா. அந்தப்பேச்சுக்கள்தோண்டிவைக்கின்ற படுகுழியில், நீர்த்துக் கிடக்கின்ற இம் மானுடமனம் பாயாமல் என்செய்யும்.

தற்காலம் மனிதர் தங்களையும் மற்றவர்களையும் பார்க்கின்ற இப்பார்வையை மாற்றவல்ல மந்திரமேனும் எந்திரமேனும்ஒன்றுகண்டுபிடிக்கப்படுமாயின், அங்கிமிட[illegible]ன் [illegible]மனிதரை வருத்துகின்ற இத்தீமை[illegible] எண்ணிறந்த[illegible]தேனும் போம்; அல்லது தாமே நலமுறத் திருந்தியேனும்விடும். இது நிச்சயம். அதிகாரம் செல்வாக்கு முதலியவைகள் இல்லாத அறிஞர் சிலர் கருதிக்கருதிக் கண்டுகொண்டிருக்கின்றமுடிவுகள்சிலவற்றை, அதிகாரமும் செல்வாக்கும் உடையவர்களாய்ச் சனங்களை நடத்துவதற்குத் தலைப்பட்டிருக்கின்றவர் ஏற்றுக்கொள்ள இணங்குவார்களாயின், நாளைக்கே, நினைத்துமறியாத நன்மைகள்தோன்றக்காணலாம். வறுமைக்கும்செல்வத்திற்கும் பிறகு போராட்டமில்லை; முதலாளியும் தொழிலாளியும் மாறுபடவேண்டியதில்லை; நாட்டுச்செருக்கும், ஜாதிப்பகையு மில்லை. சமயப்பிணக் கில்லை; அரசியல்வஞ்சனையில்லை. ஆண்பெண் அமர்களம் இல்லை. இதனைவிட்டு நெடிது நாள் இயம்பி யியம்பி இலைத்துப்போனஎச்சில்களையே இன்னமும் பகர்ந்து கொண்டிருப்பதால் யாது பயன்?

ஆழ்ந்து நோக்குவோமாயின், எதற்கும்யாருக்கும் மனிதரை வருத்தக்கூடிய சக்தி யில்லை; மற்று, மனிதர், விஷயங்களைப்பற்றிக் கொண்டுள்ள அபிப்பிராயங்களே அவர் படுகின்ற வருத்தத்திற்கெல்லாம் காரணமாம். தன்தம்பி, தன் அயலான், தன்அரசாங்கம், அல்லது தன் பழக்கவழக்கங்கள், மற்று, தன்கடவுள், இவையனையவைகளின் தலையில், மனிதர் தாம் படுகின்ற துன்பங்களின் பொறுப்பைச் சுமத்துவது இயற்கையாயிருக்கின்றது. ஆகையாற்றான், இவைகளை எவ்வளவு நல்ல நல்ல சுமைதாங்கியாக மாற்றித் திருத்தியமைக்க முயன்றாலும், மனிதர்களை அழுத்

துகின்ற துன்பத்தில் எள்ளளவேனுங் குறையவோ மாட்டேனென்கின்றது. இவைகள் தாம்என்னசெய்யும், பாவம். அவைகள் அல்லவே நம்மை அல்லல்படுத்துபவை. அல்லல்செய்வதே அவைகளின்குணமாயின், எல்லோரையும் எக்காலத்திலுமவை அல்லலே செய்தவண்ணமா யிருத்தல் வேண்டும்! அன்னவாறு அவை யில்லையென்பது வெளிப்படை. ஒருவருக்கே இவைகள் ஒருபோது உதவியாய் நிற்பனபோலவும் மறுபோது பகையாய் முடிவனபோலவும் தோன்றுகின்றன. இன்று விளக்கொளியைக் காணமாட்டாமல் கண் கூசுமாயின், அதன்பொருள், நம்முடைய கண்கள் ஏதோ கேடுற்றிருக்கின்றன வென்பதன்றி விளக்கின் பிழையோ அது ஆகமாட்டாமை வெளிப்படை. விளக்கைத் திருத்தமுயல்வதால் பயனில்லை; விபரீதமாகவும் முடியும். விளக்கின் தலையில் பிழையையும்பழியையும் சுமத்தி அதனை அவித்துவிடுவோமாயின் பிறகு, இருட்டில் இடறியிடறி விழவேண்டியதே கடனாவதன்றி வேறு முடிவில்லை. பார்வை நேராகிய பின்னும் வெளிச்சமில்லாமையே எஞ்சும்.

விஷயங்களால் துன்பம் விளைவதுபோல் தோன்றுகின்ற தோற்றமும் இவ்வகைத்தே. ஒன்று நம்மை வருத்தத் துவக்கியவுடன் நம்மிற்றானே ஏதோபிழையுளதென எண்ணத்தலைப்படுதல்வேண்டும். அதனைப் பற்றி நாம் கொண்டிருக்கிற அபிப்பிராயம் அமைய வேண்டியபடி இல்லாமல் ஏதோ பிழையுற்றிருக்கின்றதென்பதையே, அவ்வருத்தம் அறிவுறுத்திக் காட்டுகின்றது. இருவர், சாத்தனும் கொற்றனும் ஏதோ சண்டை யிடுகின்றார்களென்றுநாம் வைத்துக்கொள்வோம். பருவுடல்கொண்டு எண்ணுமளவில், இந்தச் சண்டையில் கலந்திருப்பவர் இருவரேபோல்தோன்றினும், உற்று நோக்குங்கால், அந்தத்தில் எட்டுப் பேர் அங்கிருந்து இயங்குந் தன்மை எளிதிற் புலப்படும். உண்மையில் சாத்தன் எவ்வியல்பினனோ அவ்வியல்பினனாகிய அந்தச் சாத்தன் ஒன்று; இவன் தன்னை என்ன இயல்பினன் என்று அபிப்பிராயங்கொண்டிருக்கின்றனனோ, அவ்வபிப்பிராயத்திற்கு இலக்காகிய அந்தச் சாத்தன் இரண்டு; கொற்றன் இவனை என்ன இயல்பினன் என்று அபிப்பிராயங்கொண்டிருக்கின்றானோ, அந்தஅபிப்பிராயத்திற்குரிய சாத்தன் மூன்று; கொற்றன் தன்னைப்பற்றி என்ன அபிப்பிராயங் கொண்டிருக்கின்றான் என்று சாத்தன் அபிப்பிராயங் கொண்டிருக்கின்றானோ, அந்த அபிப்பிராயத்தின்படி அமைகின்ற சாத்தன் நான்கு. இன்னவரிசை கொற்றனுக்கும் அமையும். இப்படி எட்டுப் பேர் அச்சண்டையுள் அடங்கியிருக்கின்றனர். இவ்வெண்மரில், அந்தரம் நோக்கில், உண்மையான கொற்றனுக்கும் உண்மையான சாத்தனுக்கும் எவ்வகை இகலுமில்லை; உண்மையான கொற்றனேனும் சாத்தனேனும் ஒருவருக்கொருவர்எவ்விதத்துன்பமுஞ்செய்யவில்லை; செய்ய இயலவும் இயலாது. இடையிலே புகுந்து படுத்திவைக்கின்ற பாடெல்லாம் இவ் வபிப்பிராயங்கள் தாம்.

இவ் வபிப்பிராயங்கள் காலதேச வர்த்தமானங்களுக்கு ஏற்றபடி மாறும். எவ்வாறுமாறினும், ஒருவனுடைய துன்பங்களுக்குஇடந்தருவன இவைகளே. இன்பத்திற்கும் இவைகள் தாமே இடமாகவேண்டும் என்று சிலர் எண்ணலாம். ஆம்; ஆயினும் அவ்வபிப்பிராயங்களே மெய்ம்மையாகவும் அமைய நேரும் போது அந்நன்னிலைவாய்க்கும். அப்பொழுது அவை அபிப்பிராயம் என்னுந் தன்மைநீங்கி அறிவு என்னலாகி நிற்கின்றது. ஆயினும், மானுடமனத்தின் கொடுமைகளில் மிகப்பெரியது யாதெனில், மனிதர் தம்முடைய அபிப்பிராயங்களை நம்புகின்றார்களேயொழியத் தம்முடைய அறிவை நம்பமாட்டே னென்கின்றார்கள். இந்த விபரீதத்திற்குக் காரணம் யாதோ தெரியவில்லை. இச்செய்தி ஆங்கிலமொழிமரபில் செவ்விதின்புலப்படும். "இப்பொழுது மணிஎன்ன இருக்கும்?" என்று கையில் கடியாரம்இல்லாதவொருவனைக் கேட்டால், அவன் "மணி மூன்று இருக்கும் என்றுநம்புகின்றேன்" (I belive it will be 3 o' clock) என்று பதிற்சொல்கின்றான். கையில்கடியாரமில்லாமையால் இது அவனுடைய அறிவு அன்று; அபிப்ராயமே. ஆயினும் அவ்வபிப்ராயத்தைத்தான் "நம்புகின்றேன்" என்கின்றான் அவன். சிந்திக்கச்சிந்திக்க வளர்கிறது இவ்விந்தை. இவ்வாறின்றி, ஒருவன் தன் கைக்கடியாரத்தை நோக்கி மணி மூன்று ஆவதைத் தெரிந்துகொள்கின்றான் என்று வைத்துக் கொள்வோம். அது அறிவு; ஆயினும் அவ்வறிவை நம்பாமல், அடுத்திருப்பவன் கைக்கடியாரத்தை நோக்கிச் சோதிக்கத் தலைப்படுவதையும் பார்க்கின்றோம். அபிப்பிராயத்தை அத்துணை எளிதில் 'நம்பின' அவனே, அறிவை இவ்வளவு விரைவில் அயிர்க்கப்புகுவான் என்? அபிப்பிராயத்திற்கு இருக்கின்ற ஆற்றல் அறிவிற்கில்லையல்லவா? எனின், அறிவைவளர்ப்பதனினு மபிப்பிராயத்தை அமைப்பதன் அவசியத்தை உணர்த்துவதற்கு வேறு சான்றுகள் வேண்டா.

மனிதஇனம் பொதுப்படத் தனதுஅபிப்பிராயத்தில் எத்துணை உறுதியானவோர் நம்பிக்கை வைத்திருக்கின்றதென்பதை உணர்வதற்குரிய சுவையுடைய செய்தியொன்றை டேகார்ட் (Descartes) என்பவர் பின்வருவமாறு அரிதின் காட்டுகின்றார்:

Good sense is, of all things among men, the most equally distributed; for every one thinks himself so abundantly provided with it that those even who are the most difficult to satisfy in everything else do not usually desire a larger measure of this quality than they already possess.

தம்மிடத்தில் எத்துணைஇருப்பினும்அது போதாதென்னவே மேலும் மேலும் அவாவியவண்ணமாக இருக்கின்ற மனிதர், ஒவ்வொருவரும் தத்தமக்கு இருப்பதாக எண்ணியிருக்கின்ற நல்லறிவின் திறத்திலோ இவ்வகை அவர் யாதொன்றுங்காட்டுவதில்லை. யாவரேதானாயினும் எல்லோரும் தமக்கு வேண்டிய அளவு நல்லறிவு இருக்கின்றதென்றே அபிப்பிராயங் கொண்டு விவகரிக்கின்றனர். தமக்கு நல்லறிவுஇல்லையென்றேனும் இருப்பது போதாதென்றேனும் எண்ணி, அதனை ஈட்டிக்[illegible]வமுடையவர்களைக் காணல்மி[illegible]. தான [illegible] அறிவா

199199

ளியாயிருக்கின்றுன் என்னுமவ்வபிப்பிராயம், மாறு
தற்கரிய நம்பிக்கையாய் அமைந்திருந்தாலன்றி, இவ்
விஷயத்தி லிவ்வளவு 'திருப்தி' ஏற்படுதல் இயலாது.
"ஆசைக்கோர் அளவில்லை" என்றுபேசினவர் இந்தச்
செய்தியைக் கருத்திட்கொள்ளாமலே பேசியிருக்
கின்றுர்.

இவ்வண்ணமே எல்லாவிடயங்களிலும், மனிதர்,
தம்அபிப்பிராயத்தைநம்பியும் அறிந்திருப்பவைகளை
அயிர்த்தும் அல்லலுக்கே ஆளாகிற்கின்றனர். அறி
வினுல் வரும் நன்மைதீமைகள் எவையேயாயினும்,
நாம் இவ்வபிப்பிராயத்தினுல் நம்மை நம்மோடும் புற
உலகத்தோடும் பகைசெய்துகொள்கின்ற விதங்களுக்
குக் கணக்கில்லை. மெல்லமெல்ல, இவ்வபிப்பிராயங்
களை அறிவாக மாற்றிக்கொண்டு அவ்வறிவையே நம்
பிக் கடைபிடிக்கக்கற்றுக்கொள்வோமாயின், இனிது
வாழ்வதற்கு இடையூரு யிருப்பவைகளில் எத்தனை
யோ எளிதினீங்கிவிடும். அபிப்பிராயங்கள் ஆபத்தாய்
முடிவதற்குக் காரணம் ஒன்றே. விஷயங்களை நம்மு
டன் சார்த்தியே மதிக்கப் புகுகின்றதாற்றுன், அவ்
வபிப்பிராயங்கள் விடயங்களின் உண்மைத்தன்மை
யைக்காட்டுவதின்றி நம்முடையகலப்பினுல்கலக்கப்
பட்டுச் சிதைந்துபோன வொரு உருவத்தையே நமக்
குத் தோற்றுவிக்கின்றன. நம்மி திருக்கும் பற்றினுல்
அச்சிதைவையே முழுமையென நம்பிவிடுகின்றோம்.
வேறென்! விளைவினைக்கண்டுவருந்தவேண்டிவருகின்
றது; வந்தாலும், பின்னும் அபிப்பிராயத்தை மாற்ற
முயல்கின்றோமேயல்லது அறிவைத்திருத்தவோமுய
லாமல் தீர்கின்றோமே.

கம்பராமாயணம்

கிஷ்கிந்தா காண்டம்—8. அரசியற் படலம்

[753-வது பக்கத் தொடர்ச்சி]

இருக்க வேன்றே வேண்டின ரிருவர்.

கடவுளே கண்முன்நிற்க அவ்வடிவத்தைக் காணமா
ட்டாது உருவமே தடவித்தடவி உழல்கின்ற சுக்
கிரீவனுக்கு, மன்னவர் மன்னனுகிய இராமன், ஏற்ற
பெற்றி, இன்னுஞ் சில உறுதிகள் கூறலாகின்றுன்.
இவ்வுறுதிகள், முன்னே விளக்கிக்காட்டியிருக்கும்
வண்ணம், தாம் உயர்ந்தஅளவு உயர்ந்தனவேயன்றி
உயர்வினேடு உயர்ந்தன வாகா. உதவி, செய்யப்பட்
டார் வரைத்து ஆவதேபோல், பெரும்பாலும் உறுதி
யும் உரைக்கப்பட்டார்வரைத்தேயாகின்றது. இதனை
முன்னர்க் கண்டபடியே இராகவன் பின்னருங் கூறு
கின்றுன்.

நாயக னல்ல னம்மை நனிபயந் தெடுத்து நல்குந்
தாயென வினிது பேணத் தாங்குதி தாங்கு வாரை
யாயது தன்மை யேனு மறவரம் பிகவா வண்ணந்
தீயன வந்த போது சுடுதியாற் றீமை யோரை

['இவன் நமக்கு அரசன் அல்லன், மற்று,நம்மைப்பெற்
றெடுத்து நன்றாக வளர்க்கும் தாயே' என்று உன்கீழ் வா
ழும் பிரஜைகள் எண்ணி உன்னை அவர்கள் இனிமையாக
விரும்பிப் பாராட்டும்படி, உன்னுல் பாதுகாத்தற்குரியவ
ரைப் பாதுகாப்பாயாக.அதுதான் இயல்பாயிருக்க வேண்
டுமாயினும், உனது நாட்டில் தீமை நேர்ந்தபோது, அத்
தீமை செய்தவர்களை அறத்தின் வரம்பு கடவாமல் தண்
டிப்பாயாக]

அரசநீதியின் மிகப்பழைய வாசகங்கள் இவை."குடி
புறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல் வடுவன்று வேந்
தன் தொழில்", என்றும், "கொலையிற் கொடியாரை
வேந்தொறுத்தல் பைங்கூழ்களைகட்டதனேடுநேர்"
என்றும் பகர்கின்ற "பொருட்பால்" விதிகள், சுக்கி
ரீவன்போன்று அரசு எய்தினவர்களுக்கும், அவன
ளவே உள்ளநிலை உடையவர்களுக்கும் மட்டுமே ஏற்
கும் ஏற்கும் என்று காட்டுமித்திறமை நனிமிக நுண்
மைவாய்ந்தது. தயரதனுக்கு இன்னவை யொன்றும்
வேண்டாமை அன்னரசியல் மனுவென்ற நீதியால்
நிகழ்ந்தது. தீயோரைக் களைகட்டு நல்லோரைக்காக்க
வேண்டுமென்னும் இச்சிறுவிதி இராமனுக்கும் இய
ன்றதாகாதென்றே முன்னர் வசிட்டனும்இவனுக்கு
இவைகளை அறிவுறுத்தப் புக்கிலன். பிரஜைகளி னி
டத்தில் சுக்கிரீவன் நடந்துகொள்வதற்குரிய முறை
களை இராமன் பேசுகின்றுனயினும், ஆழ்ந்துநோக்கு
மிடத்து, சுக்கிரீவனது நன்மைக்கா இவை வற்புறுத்
தப்படுகின்றனவேயன்றி அவன் பிரஜைகளின் நன்
மையை முதலாகக்கொண்டவோர் அரசியல் முயற்சி
அங்குக் காணப்படுவது அரிது. நல்லவர்களைத் தாங்கு
வதால்அரசனுக்கு நன்மையுண்டு,ஆதலின்,அன்னது
அவன்செய்தல் வேண்டும்; தீயோர்தீமைசெய்வதால்
அரசனுக்கு இடுக்கண் உண்டாம், ஆதலினவர்களைச்
சுடுதல் வேண்டும். கோல் உயருமாறே குடிகள் உயர்
தல்வேண்டும் என்னுங் கொள்கைத்து, இது. "தீயன
வந்தபோது சுடுதியாற் றீமையோரை" என்றனன் இ
ராமபிரான். தீயனவற்றுல் வருகின்ற இடுக்கண்களை
விலக்கவேண்டுவோர் நினைக்கவல்ல வழிகளில் மிக்க
எளியது அத்தீமையோரைச் சுட்டுவிடுதல். இதுவோர்
செயற்கரியதன்று, ஆதலின் அதன்பயனும் மிகச்சிறி
யதே. தான் காட்டிய நன்னெறிக்கண் நடவாமல்
மாறிநிற்பவரை அரசன் வயப்படுத்தி வணக்குவானு
யின் அதுவன்றோ பெருமை; ஆதலின் அருமையும்,
ஆம். அன்னபெருமையைத் தோலாமொழித்தேவர்
தன் அரசன் பயாபதியின்பால் இனிது கண்டு,

ஆறிலொன் றறமென வருளி னல்லதொன்
றாறுசெய் துலகினி னுவப்ப தில்லையே
மாறிநின் றவரையும் வணக்கி னல்லது
சீறிநின் றெவரையுஞ் செகுப்ப தில்லையே

[தம் வருவாயில் ஆறிலொருபகுதி அரசனுக்குக்கொடு
ப்பது தம் கடன் என்று கருதிப் பிரஜைகள் அன்போடு
கொடுத்தாலன்றி இப்பயாபதி இவ்வுலகில் ஒருவருக்குத்
துன்பஞ் செய்து தான் சுகமடைய நினைப்பதில்லை. தத்
தம் அறத்திலிருந்து மாறிநிற்பவர்களையும் தன்அன்பால்
வயப்படுத்தி அறத்தினேடு இணங்கும்படி செய்வதன்றி
எவரையும் இவன் கோபித்துத் தண்டிப்பதில்லை]

என்று செவ்விதின் எடுத்துக் காட்டியிருக்கும் மேன்மையையே கம்பரும் உவப்பார், இராமனும் உவப்பான்; ஆயினும் சுக்கிரீவன் அதனை உணரமாட்டாதவனாதலின், சுடுதொழிலையே அவனுக்கு இவர் இராமனைக்கொண்டு சொல்விக்கின்றார் என்று எண்ணல் வேண்டும்.

தீமையோரைச் சுட்டொழிக்குந்திறமை இதுவாயின், ஏனையோரைத் தாங்கும்படி சொன்ன தன்மையும் இன்னதற் கிணையாகவே நிற்கின்றது. "நின்னை அவர் தாயெனக் கருதும்படி நடந்துகொள்" என்று இராமன் இசைக்கின்றானல்லது, "உன்னை நீ அவர்களுக்குத் தாயாகக் கருதி நடந்துகொள்" எனக் கூறுகின்றான் அல்லன். இவை யிரண்டும், ஒன்றையே இரண்டு வகையில் உரைத்தன வாகா; அவ்வவற்றிற்குரிய மனநிலைகளினால் மிகமிக வேறுபடும். தயரதன் தாய் ஒப்பான்; சுக்கிரீவனோ தன்னைத் தாயென மற்றவர் நினைக்கும்படி நடந்துகொள்ளவேண்டியவன். முன்னது மனத்தின் அன்பு, பின்னது நடத்தையின் உபாயம். முன்னது தான் மற்றவரை இனிதுபேணித் தாங்குதல்; பின்னையதோ, மற்றவர் தன்னை இனிது பேணத் தாங்குவது. காரியப் பொருளதாகிய இச் செய வென்னும் வாய்பாட்டு வினையெச்சம் அனைத்தையும் அடியுடன் மாற்றிவிடுகின்றது. சுக்கிரீவனல்லாமல் வேறு ஒருவனுக்கு உரைக்கப்பெற்றதாயின் இவ்வுறுதி,

நாயக னல்லன் மற்று நனிபயந் தெடுத்து நல்குந்
தாயென வினிது பேணித் தாங்குதி தாங்கு வாரை
ஆயது தன்மை யாத லறவரம் பிகவா வண்ணம்
தீயன புரிந்த போது திருத்துதி தீமை யோரை

என்ன மாறி வந்திருக்கும். தாயென இவனேநல்கிப் பேணுவானாயின், பொல்லாத சேயெனினுந் தாய்தள்ளல் நீதியன்றாதலின், தீமையோரைச் சுடுதலின்றித் திருத்துதலே இவனுக்கு முறைமையாம். அவ்வாறு அல்லாமல், தாயென்னப் பேணும்படி தாங்குவோன், தீமையோரைச் சுடுதலே சூழ்ச்சியாய்மன்னர்தொழிலைத் தற்பயன் கருதிப் புரிபவனாகின்றான்.

இனி, அறத்தின் தன்மையை அறைகின்றான் இராமன். இதுவும், "மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று" என்பதனைய உயர்வினைச் சாராமல், சுக்கிரீவன்தன் நன்மையை நாடுதற் கேற்றவாறே அமைந்திருக்கின்றது.

இறத்தலும் பிறத்த றானு
மென்பன விரண்டும் யாண்டுந்
திறத்துளி நோக்கிற் செய்த
வினைதரத் தெரிந்த வன்றே
புறத்தினி யுரைப்ப தென்னே
பூவின்மேற் புனிதற் கேனு
மறத்தின திறுதி வாழ்நாட்
கிறுதியஃ துறுதி யென்ப.

[உண்மை நெறியால் பார்க்குமிடத்து, இறத்தல் பிறத்தல் என்னும் இரண்டும், எப்பொழுதும், அவரவர் செய்த கருமங்கள் [illegible]ளுக் கொடுக்கத் தோன்றுவன அன்றோ? தாமரைமலரில் இருக்கும் பரிசுத்தமுடையவனாகிய பிரம்மனுக்கும், அவன் அறத்திற்கு முடிவு வருமானால் அவனது ஆயுளுக்கும் முடிவு வந்துவிடும், இது நிச்சயம் என்று கூறுவார் என்றால், வேறு என்ன கூறவேண்டும்.]

ஆக்கமுங் கேடுந் தாஞ்செ
யறத்தொடு பாவ மாய
போக்கிவே றுண்மை தேறார்
பொருவரும் புலமை நூலோர்
தாக்கின வொன்றோ டொன்று
தருக்குறுஞ் செருவிற் றக்கோய்
பாக்கிய மன்றி யொன்றும்
பாவத்தைப் பற்ற லாமோ

[ஒன்றோடொன்று தாக்கிச் செருக்குகின்ற போரில் தக்கவனே, செல்வமும் வறுமையும் அவரவர் செய்த அறமும் பாவமும் ஆகியவற்றைத்தவிர்த்து வேறுஒன்றுஇருக்கின்றதென்று, ஒப்பற்ற புலமைவாய்ந்த நூல்களில் வல்லவர் அறியமாட்டார். ஆதலால், பாக்கியத்திற் காதாரமான அறத்தைச் செய்வதற்கு மாறாகப் பாவத்தைச்சிறிதேனுங் கைக்கொள்ளலாமோ]

இன்னது தகைமை யென்ப
வியல்புளி மரபி னெண்ணி
மன்னர சியற்றி யென்கண்
வருவழி மாரிக் காலம்
பின்னுற முறையி னுன்றன்
பெருங்கடற் சேனை யோடுந்
துன்னுதி போதி யென்றான்
சுந்தர னவனுஞ் சொல்வான்

[இவைதாம் முறைமை யென்று பெரியோர் கூறுவார். அதன தன்தன்மைக்குத்தக்கபடி முறைப்படிஎண்ணிஉன் அரசகாரியங்களைச் செய்து, இனி வரும் மழைக்காலங் கழிந்தபின்பு, ஒழுங்கான உனது பெரிய கடல்போன்ற சேனையுடன் என்னிடம் வரக்கடவாய், என்று அழகினிற் சிறந்தஇராமபிரான் கூறினான். அதற்குச் சுக்கிரீவனும் பின்வருமாறு பதிற்சொல்லுவான்]

இராமன் உரைத்த இவ் வுறுதிமொழிகள் சுக்கிரீவனது உள்ளத்திற் சென்று உறைந்தன வென்னவே எண்ணல்வேண்டும். சுக்கிரீவ னிருந்தநிலையில் இருப்பவர்களுக்கெல்லாம் பொருட்பால் செய்திகள் பயன் பெரிதுடையவைகளாகத் தோன்றுதல் இயற்கையே. கடவுளின் நிலையையும் கலையினது நலத்தையும் ஆர்வமுடன் அறிவிற்கொண்டு அமைவதனினும் அரசியல் நெறியையும் பொருளாதார முறைகளையும் நனிமிகப் போற்றி அன்னவைகளைப் போதிப்பவர்களை வழிபடுவதே எஞ்ஞான்றும்எவ்விடத்தும் காணப்பெறுகின்றது. வாலியின் சொற்களுக்கு வாளாவிருந்த இந்தச் சுக்கிரீவனே, இராமனது இவ் வுறுதி மொழிகளைக் கேட்டு உற்சாகங் கொள்கின்றான். கொண்டு,

குரங்குறை யிருக்கை யென்னுங்
குற்றமே குற்ற மல்லால்
அரங்குறு துறக்க நாட்டுக்
கரசென லாய தன்றே
மரங்கிள ரருவிக் குன்றம்
வள்ளனீ மனத்தி னெம்மை
இரங்கிய பணியாஞ் செய்ய
விருத்தியாற் சின்னா ளெம்பால்

["வள்ளலே, மரங்கள் செழித்திருப்பதும் அருவிகள் பாய்வதுமான இந்தக் கிஷ்கிந்தை மலையானது, குரங்கு

கள் வசிக்கின்ற இடமாயிற்றே என்ற ஒரு குற்றம் உடையதேயன்றி, மற்றபடி, சுதர்மைஎன்னப்படும் சபையையுடைய தேவலோகத்துள்ள அமராவதியேஎன்றுசொல்லத் தகுந்ததன்றோ. நீ எங்களிடத்தில் அருள் வைத்து இடுகின்ற கட்டளைகளை நாங்கள் செய்யும் பொருட்டுச் சிறிது காலம் எங்களுடன் தங்கியிருப்பாயாக]

என்று வேண்டலானான். அண்ணனைக் கொல்வித்துத் தான் கைக்கொண்ட அரசு தனக்கு நிலைக்கின்றவரையிலும் இராமனது உதவியை வேண்டுமொரு சூழ்ச்சியே யிதுவென் றெண்ணிச் சுக்கிரீவனுக்குத் தீங்கிழைத்த லாகாது. இவன் எய்துகின்ற அரசினில் கலகங்கள் சில விளையலாம்; இராமனனைய வீரர் அருகில் துணையிருக்க அக்கலகங்களை அடக்குதல் எளியதுமாகலாம்; இவை உண்மையே; இராமனும் இன்னது எதிர்பார்த்தா னென்னப் பின் அவன் பேசும் மொழியொன்று தெரிவிக்கின்றது. ஆயினும், சுக்கிரீவன் அவ்வச்சத்தாலும் இவ்வுதவியை வேண்டியும் அல்லாமல்வேறு எவ்வகை உணர்ச்சிபற்றியும்இராமனைத் தன்பால் வந்து தங்குமாறு அழைத்திலன்என மதித்தல் பிழைபடும். மீண்டுங் கூறுவான்—

அரிந்தம நின்னை யண்மி
யருளுக்கு முரிய மாகிப்
பிரிந்துவே றெய்துஞ் செல்வம்
வெறுமையிற் பிறிதொன் றாமோ
கருந்தடங் கண்ணி னாளை
நாடலாங் காலங் காறும்
இருந்தரு டுறுதி யெம்மோ
டென்றடி யிணையின் வீழ்ந்தான்

[சத்துருக்களை அழிப்பவனே, உன்னை அடைந்து, உன் அருளுக்கும் உரியவர்களாயிருந்து, பிறகு, உன்னைவிட்டுப் பிரிந்து வேறு எய்துகின்ற அச்செல்வமானது, ஒன்றும் இல்லாமைக்கேசமானமன்றி வேறொன்றுஆகக்கூடுமோ! கரிய பெரிய கண்களையுடைய சீதையைத் தேடுவதற்கு ஏற்றகாலம் வருகின்றவரையில், நீ எங்களோடு தங்கியருளுதல் வேண்டும், என்று சொல்லி, இராமனது இரண்டு பாதங்களிலும் விழுந்து வணங்கினான்.]

வாலியின் சொல்லிற் கிணங்கி வணங்காத சுக்கிரீவன், அதற்குமுன்னேபோல் பின்னும் தன்பொறுப்பில் இராமபிரானை வணங்குமிது சாலப்பொருத்தமுடையதே. "தீர்வரும் பிறவியைத் தீர்க்கிற்பானை அடிபணிந்து உய்தி" என்றான் வாலி. அச்சொற்களின் பொருளும் பயனும் சுக்கிரீவனனையவர் உள்ளத்தில் அழுந்துதலருமை; இச்சொற்களுக்கு ஒருபொருள் உளதோ என்னும் ஐயமே தலைக்கொள்ளும். ஐயம் சுமந்ததலையோ வணங்குதற்கிசையாது. மற்றிவ் விராமனேஅரிந்தமன் என்பதற்குச் சற்றேனும்ஐயமில்லை; வாலியைக்கொன்றவலியேசாலும். எனின், பரந்தாமனைப்பணிந்து பிறவிதீர்ந்து உய்யலாம் என்பதை உட்கொள்வதனினும், அரிந்தமனை அடிவணங்கிவாழலாமென்னுந்தன்மை எஞ்ஞான்றும் எவராலும் எளிதிலேற்கப்படும். ஆதலின், இப்பொழுதுசுக்கிரீவன் இராமனது இணையடிகளை வணக்கமுடன்பணிந்துவிட்டான். எனினும், இப் பணிவு, மனமறிந்த வொரு பிரதிப்பயனைக்கருதிச்செய்யப்பட்டதென்றுகொள்வதேயுங் கடனன்று. "நின்னைப்பிரிந்துவேறெய்துஞ் செல்வம்வெறுமையிற்பிறிதொன்றாமோ" என்றதும் வெற்றுரைகள் அல்ல; "நீமனத்தின் எம்மையிரங்கிய பணியாம் செய்ய இருத்தியாற் சின்னாள் எம்பால்" என்னப் பரிவுடன் பகர்ந்தமொழிகளும் அன்னவைகளே. எனினும், முன்னர்க் கங்கைக்கரையில் இவ்விராமனை வழிபட்ட அவ்வேட்டுவக்குரிசில் குகன்,

பொய்ம்முறை யலராலெம் புகலிடம் வனமேயால்
கொய்ம்முறையுறு தாரோய்குறைவிலெம்வலியேமா
செய்ம்முறை குற்றேவல் செய்குது மடியோமை [ல்
இம்முறை யுறவென்ன வினிதிரு நெடிதெம்மூர்.

[நாங்கள் வசிக்கும் இடம் காடேயாகையால் பொய்ந்நெறி அறிந்தவர்கள் அல்லர் யாம். கொய்து தொடுக்கப்பட்ட மாலையைஅணிந்த இராமனே, நாங்கள் குறைவற்ற வலிமையுடையோம். செய்யவேண்டியபடி உனதுகுற்றேவல்களை எல்லாம் செய்வோம்; அடியேங்களாகிய எங்களை இம்முறை உண்மையானஉறவினர்கள் என்று கருதி எங்களூரில் நெடுங்காலம் இனிதிருப்பாயாக]

என்றிரந்து, தம்மூரில் இராமன் நெடிதிரான் என்பதை ஓர்ந்து பின்னரும்,

ஐயிருபத் தோடைந் தாயிர ருளராணை
செய்குநர் சிலைவேடர் தேவரில் வலியோரா
உய்குது மடியேமெங் குடிலிடை யொருநாணீ
வைகுதியெனின் மேலோர் வாழ்விலை பிறிதென்றான்.

[என் கட்டளையைச் செய்பவர்களாகிய வில்லையேந்திய வேடர்கள் ஐந்து இலக்ஷம்பேர் இருக்கின்றனர். அவர்கள் தேவர்களைக்காட்டிலும் வலிமையுடையவர். எம்முடைய குடிசையில்ஒருநாளே தங்கினாயாயினும்அடியேங்களாகிய நாங்கள் ஈடேறிவிடுவோம். இதனைவிட மேலானவொரு வாழ்வு எங்களுக்கு இல்லை—]

என்று, பெரும்பாலும் இச்சுக்கிரீவன் உரைத்தன போன்ற மொழிகளைக்கொண்டே அழைத்திருக்கின்றானாயினும், இவையிரண்டையும் அயலயல் வைத்துச் சிந்திக்குங்கால், அதற்கும் இதனிற்கும் இடையே, பொய்ம்முறையறியாவனத்திற்கும் நாகரிகம்நிறைந்த நகரத்திற்கும் உள்ளதோர் வேற்றுமை உணரநிற்கின்றது. முன்னும் இராமன்பால் யாதும் பெற்றிலன் குகன், பின்னும் யாதும் பெறுதற்கு நிற்கின்றானுமல்லன். அன்னவன் அழைக்கும்போது அவன்றன் ஆன்மாவே சென்று இராமனைத் தழுவிக்கொள்கின்றது. இராமன் தன்னுடன் தங்குதற் கிசையானெனின்,

திருவுளமெனின்மற்றென் சேனையுமுடனேகொண்
டொருவலெ னொருபோதுமுறைகு வெனுளரானார்
மருவலரெனின்முன்னேமாய்குவென்வசையில்லேன்
பொருவருமணிமார்பாபோதுவெனுடனென்றான்.

[ஒப்பற்ற அழகிய மார்பையுடையவனே, நீ திருவுளம் கொள்வாயாயின், என் சேனையையும் உடன் அழைத்துக் கொண்டு ஒருபொழுதும் உன்னைவிட்டுப் பிரியாமல் உன்னுடன்வசிப்பேன். பகைவர்நேர்வாரானால் நான் முதலில் மாள்வேன். ஒரு குற்றமும் இல்லாதயான் உன்னோடு வருவேன்]

எனத் தான் இராமனுடன் போதற்குமுற்பட்டான். அன்னது துணிதல் சுக்கிரீவனது இயற்கையில் இருத்தற் கியலாது. ஆகையாற்றான் இராமனும்,

என்னுயி ரனையாய்நீ யிளவலு னிளையானிந்
நன்னுத லவணின்கே ணளிர்கட னிலமெல்லா
முன்னுடையதுநானுன் றொழிலுரிமையினுள்ளேன்

[என் உயிர் அனையவன் நீ, என் தம்பியாகிய இலக்குவன் உனக்குத் தம்பியாவான். அழகிய நெற்றியையுடைய இந்தச்சீதை உன் உறவினள் ஆவாள். குளிர்ந்த கடலால் சூழப்பட்ட பூமி முழுவதும் உன்னுடையதாகும். நானே உன்னுடையஏவற்றொழிலில்கட்டுப்பட்டவனாக இருக்கின்றேன்]

என்று குகப்பெருமானுக்கு இயம்பியதுபோல் சுக்கிரீவனுக்கு எதிர் உபசாரமாக இயம்பாமையும் வியப்பன்று.

இரத்நாவளி

[761-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம் 4. களம் 1.

இடம்:—அரண்மனையில் ஓர் அறை.

[ஸாஸங்கதை ஒரு இரத்தினமாலையைக் கையிற் கொண்டு வருகிறாள்.]

ஸாஸங்கதை:—ஐயகோ, ஐயகோ! அருமைத் தோழி ஸாகரிகா, பேதாய், நல்லாய், மெல்லியலாய்: எங்கே எங்கே!எழிலுடை நங்காய்,எங்குற்றனையோ? மீண்டும் உன்னை யான் காணேனோ? கொடுமைமிகுந்த விதியே, இத்துணை இத்துணை இணையிலா வனப்பை அவளுக்குத் தந்து பின்னர் இந்தக் கதிக்கே ஏனோ அவளை நீ ஆளாக்கினாய்! உயிரை வெறுத்துச் சென்ற அவள், இம்மணிமாலையை யாரேனும் ஓர் அந்தணனுக்குக் கொடுக்கும்படி என்னைப் பணித்தாள். யாருக்குக் கொடுப்பேன். ஆம், இதோ வருகின்றான் வஸந்தகன்; அவனுக்கே கொடுத்தல் நலம்.

[வஸந்தகன் வருகின்றான்]

வஸந்:—அப்பா, இந்தக் கண்டத்திலிருந்து தப்பினேனடா, அப்பா! அரசனது அருமை வாசகங்களால் உளங்குளிர்ந்த பெருமாட்டி என்னை விடுவித்ததுமன்றி, தன் கைகளாலேயே எனக்குப் பணிகாரங்கள் கொடுத்து, இந்தப் பொன்னுடையும் வயிரக் குண்டலங்களும் அளித்தனள். இனிச்சென்று அரசனை அடையவேண்டும்.

ஸாஸங்:—வஸந்தகா, ஒரு வார்த்தை.

வஸந்:—ஹோ! ஸாஸங்கதா, என்ன செய்தி; ஏன் அழுகின்றாய்? ஸாகரிகைக்கு ஏதேனும் நேர்ந்ததா என்ன!

ஸாஸங்:—அவளைப்பற்றித்தான்பேசநினைத்தேன். அவளை உஜ்ஜினிபுரத்திற்குப் போக்கிவிட்டாள் நம் அரசி என்று சிலர் சொல்லுகின்றனர். நள்ளிரவிலே அவளை அழைத்துக்கொண்டு போய்விட்டார்களாம். இப்பொழுது எங்கு இருக்கின்றாளோ, அறியேன்.

வஸந்.—பாவம், ஏழை ஸாகரிகை. என்ன அழகு, என்ன மென்மை, என்ன தண்மை. நம் அரசியின் வன்மையை நினைத்துச் சால அஞ்சுகின்றேன்.

ஸாஸங்:—அவளுந் தன் உயிரின்மேல் வைத்திருந்த ஆசையையெல்லாம் விட்டுவிட்டு, இம்மணிமாலையை வஸந்தகனுக்குக் கொடுக்கும்படி சொல்லிச் சென்றாள். தயைசெய்து இதனை ஏற்றுக்கொள்.

வஸந்:—(காதுகளைப் பொத்திக்கொண்டு) மாட்டேன். இவ்வளவு துன்பமுடைய நினைவுகளைத் தாங்கியுள்ள இதற்கு நான் கைநீட்ட மாட்டேன்.

(அழுகிறான்).

ஸாஸங்:—வேண்டிக்கொள்கிறேன். அவள்பொருட்டு இதனை ஏற்றுக்கொள்.

வஸந்:—இது கேள், ஸாஸங்கதா. இதனைக் கொண்டுபோய் அரசனுக்குக்கொடுத்தல் நலம். ஸாகரிகையை இழந்து வருந்தும் அவன் மனம் இதனைக் கண்டேனும் சிறிது ஆறலாம்.(ஸாஸங்கதைகையிலிருந்து அம்மணிமாலையை வாங்கி உற்றுப் பார்க்கின்றான்) என்ன என்ன! விலையரிய இவ் விரத்தின ஆரம் அவளுக்கு எப்படிக் கிடைத்திருக்கக் கூடும்?

ஸாஸங்:—நானும் அப்படியே சங்கைகொண்டு அவளைக் கேட்டேன்.

வஸந்:—என்ன சொன்னாள் அவள்?

ஸாஸங்:—என் முகத்தை இரங்கி நோக்கி, பெருமூச்சு விட்டு, "ஆ, ஸாஸங்கதா, துயரம் மிகுந்த என் சரிதத்தை உனக்குச் சொல்லிப் பயனில்லை" என்று பிறகு விம்மிவிம்மி அழுவதானாள்.

வஸந்:—அவள் சொல்லாமற் போனாலும், இந்த மாலையை உடையவள் உயர்ந்த பதவியிலிருப்பவள் என்பதில் ஐயமில்லை—அரசன் எங்குளன்?

ஸாஸங்:—அவன் அரசியினந்தப்புரத்திலிருந்து பளிங்குமண்டபத்திற்குச்சென்றான். நான் அரசியின்பால் மீளவேண்டும்; நீ அவனைத் தேடிச் செல்.

(போகின்றனர்)

களம் 2.

இடம்:—பளிங்கு மண்டபம்.

வத்ஸராஜன் வீற்றிருக்கின்றான்.

வத்ஸ:—என்னுடைய பொய்ச்சூள்களும், மென்மொழிகளும், காலில் விழுந்த பணிவுகளும் எனக்குப் புரிந்துள்ள உதவியைக்காட்டிலும் என் அரசி வடித்த அக்கண்ணீரே பெரிதும் எனக்குத் துணையாயிற்று என்று எண்ணுகின்றேன். தீயில் வார்த்த நீரைப்போல், அவளது கண்ணீர் அவள் கோபத்தை அணைத்துவிட்டது. இப்பொழுது ஸாகரிகையைக் குறித்தேகவல்கின்றேன். தாமரைஇதழென்ன மெல்லிய அவளுருவம் புதிதுபுகுந்த காதலின்வேகத்தால் கரைந்து, கண்வழிபுகுந்து என் இதயத்தின் ஆழத்தில் தங்கிவிட்டது. எனது துயரத்தைச் சொல்லிக் கொள்ளக்கூடிய எனது நண்பனோ இப்பொழுது அரசியால் சிறைவைக்கப்பட்டிருக்கிறான். இனி, யாரிடத்தில் என் துன்பத்தை உரைசெய்து ஆறுவேன்?

[வஸந்தகன் வருகிறான்]

வஸந்:—இளைத்துளனே! கவல்கின்றானேனும், கடலிலிருந்து எழுகின்ற மதிபோல் விளங்கும் மன்னவன் அங்கு இருக்கின்றான். அவனிடம் செல்லுவேன். வாழ்க மன்னவா, அதிர்ஷ்டம் இப்பொழுது உன்வசமாக இருக்கின்றது. அரசியின் பிடியினின்று நழுவிவிட்டேன். நீ என்னை உன் கண்குளிரக் கண்டு மகிழலாம்.

வத்ஸ:—வஸந்தகா, எனதருமை நண்ப (அவனைத் தழுவிக்கொள்கின்றான்). உன் ஆடை அலங்காரங்களைப் பார்க்குங்கால், நம் அரசியின் கருணைக்கு நீ பாத்திரமாயிருக்கிறாய் என்பது தெரிகின்றது.இது நிற்க. ஸாகரிகையின் செய்தி யென்ன (வஸந்தகன் தலைசாய்ந்து நிற்கின்றான்) ஐயோ, யாதே ஆயினாள் அவள், சொல்?

வஸந்:—வருத்தம்மிக உடையவைகளை நான் வாய்கொண்டு எங்ஙனம் சொல்வேன்.

வத்ஸ:—சொல்லாயோ, வஸந்தகா சொல்லாயோ! இன்னுயிர் நீத்தாளென்று இயம்புகின்றதே நின் முகம் (மூர்ச்சையடைகின்றான்)

வஸந்:—(நடுநடுங்கி) அரசே, எழுந்திரு, எழுந்திரு!

வத்ஸ:—(எழுந்திருந்து) ஆவியே அகலப் போ! முழுமனதுடன் உன்னை நான் விட்டுவிடுகின்றேன். விரைக விரைக, இல்லையேல் உன்னை யான் வலிந்து அகற்றிவிடுவேன். அவ் வனப்புடை வனிதை இதன் முன்னரே எத்தூரம் ஏகினளோ!

வஸந்:—வீணே நீ இவ்வண்ணம் விதிர்க்கின்றாய். அரசி அவளை உஜ்ஜினிபுரத்திற்கு அனுப்பியிருக்கின்றாள் என்பதைச் சொல்லவந்தேன்-வருத்தமுடையவதந்தியென்று நான் இயம்பியது இதனைத்தான்.

வத்ஸ:—உஜ்ஜினிபுரத்திற்கா! ஆஹா, வாஸவதத்தை மிகக் கொடியவள். உனக்கெப்படித் தெரிந்தது இது?

வஸந்:—ஸாஸங்கதை சொன்னாள். உன்பால் கொடுக்கும்படி இந்த இரத்தின ஆரத்தையும் அனுப்பினாள். அதற்குக் காரணம் அறிவாள் அவள்.

வத்ஸ:—என் வேதனையைத் தணிப்பதற்கே—வேறு என்! கொடு பார்ப்போம் (வஸந்தகன் கொடுக்க, அதனைத் தன் மார்போடு அணைத்துக்கொண்டு) ஒரு போது அவள் கழுத்தைத் தழுவியிருந்த இது இப்பொழுது அவளை நெடுந்தூரம் பிரிந்திருக்கின்றது. இப்பிரிவினால் நானும் இவ்வாரமும் துன்பநிலையில் ஒத்திருக்கின்றோம். நண்பா இதனை அணிந்துகொள். அதனைக் கண்ணாரக் கண்டேனும் துடிக்கின்ற என் நெஞ்சிற்குத் துணைசெய்துகொள்கின்றேன்.

வஸந்:—அப்படியே. (அணிந்துகொள்கிறான்.)

வத்ஸ:—ஐயகோ! என் காதலியை எங்ஙனே இனிக் காணுவேன்.

வஸந்:—மெல்லப் பேசு—யாரோ வருகின்றார்.

[வத்ஸராஜனது படைத்தலைவர்களில்ஒருவனாகிய விஜயவர்மன் வருகின்றான்.]

விஜயவர்மன்:—மன்னவா போற்றி! நின் சேனாதிபதி ருமணவானினது வெற்றியால் உனதுபாக்கியம் சிறக்கின்றது.

வத்ஸ:—ஆயின், கோசலர் அடக்கப்பெற்றனரோ?

விஜய:—எல்லாம் நின் கொற்றம்.

வத்ஸ:—ருமணவான் தனது பணியைச் செவ்விதின் ஆற்றினான். வெல்லற் கரிய போரன்றோ அது. வெற்றி இது வாய்த்த வகையெல்லாம் சொல், கேட்போம்.

விஜய:—நின் ஆணையைப் பெற்றவுடன், சேனாதிபதி ருமணவான், வீரரும்புரவியும் களிறும் கொண்டதோர் பெரும்படைதிரட்டிச்சென்று, விந்தியமலையிலுள்ள ஓர் அரணத்தினுள் கோசல மன்னனைச் சூழ்ந்துகொண்டான்.

வத்ஸ:—அப்புறம்?

விஜய:—கோசல மன்னனும் போர்க்களம் நண்ணினான்.

வஸந்:—முடிவைக் கேட்க என் மனம் துடிக்கின்றது. விரைவாகச் சொல்.

விஜய:—உச்சியினின்று இறங்கிய பகைவன் துசேனை எம்மீதுபாய்ந்தது. மலையின்மீதுமலைகளென்ன நின்ற அவ் வானைப்படையின் தோற்றத்தை என்னவென்று சொல்வேன். அவைகளின்முன் நம் வில்லாட்கள் சிதறி ஓடலாயினர். ஓடினோர் உடலங்களின் மீது சொரிந்த பாணங்கள் உருவிச்சென்றன. எம் சேனாதிபதியின் எண்ணத்தினை அழித்துவிட்டார்களென்னப் பகைவரும்களித்தனர். படையொடுபடை மோதித் தீப்பறந்தது. தலையொடு தலைகள் மோதி உடைந்தன. படைக்கலன்களும் துணிந்தசிரங்களும் குருதிக்குளத்தில் மிதந்தன. கோசல மன்னன் பேசிய வஞ்சினம் நம் படைஞர் செவிகளைத் துளைத்தது.

வத்ஸ:—ஆயின், நம் படைவலி யுடைந்ததோ?

விஜய:—எங்கள் தலைவன் அம்மன்னவனைத் தனிப்போரில் புகுந்தெதிர்த்து அவன் உயிரைக் கொண்டுவிட்டான்.

வஸந்:—வெற்றி, வெற்றி! வென்று விட்டோம் நாம்!

வத்ஸ:—கோசலமன்னன், நல்ல நம் பகைவன், வீரர்க்குரிய நற்பதவியைப் பெற்றிருப்பான். பகைவரும் புகழ்கின்ற ஆற்றலுடைய அவன்பெருமையோ பாராட்டற் குரியது...அப்புறம்?

விஜய:—ருமணவான், கோசலத்தை ஆளும்படி ஸஞ்சயவர்மனை அமர்த்தி இந்நகர்க்குஇப்பொழுதே திரும்பிவந்துளன்.

வத்ஸ:—விஜயவர்மா, நம் நிதிச்சாலையைத்திறந்து வேண்டினோர்க்கு வேண்டியவளவு கொடுக்கும்படி, எம்மந்திரி யௌகாந்தராயனிடம் சொல்.

விஜய:—அப்படியே, அரசே.

(விஜயவர்மன் போகிறான்.)

[காஞ்சனமாலை வருகின்றாள்]

காஞ்ச:—அரசே போற்றி! ஸம்வரண வசித்தன் என்னும் மந்திரவாதி உஜ்ஜினி நகரத்திலிருந்து வந்திருக்கின்றானென்பதைத் தெரிவிக்கும்படி எம்மரசி என்னை அனுப்பியிருக்கிறாள். அவனைக் காண்பதற்கு இது சமயமோ?

வத்ஸ:—வரச்சொல். இந்தக் கலையில் எனக்கு ஆசை அதிகமுளது.(காஞ்சனமாலைசென்று, மந்திரவாதி ஸம்வரணவசித்தனை அழைத்து வருகிறாள். அவன்கையில் மயிலிறகுக் கற்றை வைத்திருக்கிறான்.)

காஞ்ச:—அரசர்பெருமான் அங்குளன்.

ஸம்வரண:—(மயிலிறகை ஆட்டிப் புன்னகைசெய்துகொண்டு) எங்கள் கலைக்குத் தன் பெரும்பெயரைத் தந்திருக்கின்ற இந்திரன் வாழ்க! அரசே, நின் ஆணையைச் சொல். சந்திரனை இந்தத் தரைக்குக் கொணரவேண்டுமா, மலையைக் காற்றிலே கிளப்பவேண்டுமா, கடலிலே நெருப்பினை எழுப்பவேண்டுமா, பகலை இரவாக்க வேண்டுமா—எல்லாம் செய்ய வல்லேன்—சொல்.

வஸந்:—அரசே, ஜாக்கிரதை—இந்த இந்திரஜாலக்காரன் எத்தகைய ஆளோ, யாம் அறியோம்.

ஸம்வரண:—பலபடச்சொல்வானேன்? என் குருவின் உபதேச பலத்தினால் நான், இப்பொழுது நீ உன் முழு இதயமுடன்யாரைக் காணல்வேண்டுமென்று அவாவினாலும் கொணர்ந்து கண்முன் காட்டுவேன்.

வத்ஸ:—இம் மந்திரவாதியின் திறமையை எமது அரசியுடன்இருந்தே காணவிழைகின்[illegible]

ஜ
m241, N28KN
N34:7:41
199199

இவன் அவளுக்கு ஆட்செய்பவன். காஞ்சனமாலா, நீசென்று அரசியை அழைத்துவா.

காஞ்ச:—அரசியே வருகின்றாள்.

[வாஸவதத்தை வருகின்றாள்]

வாஸவ:—(காஞ்சனமாலைக்கு ஒருபுறமாய்) பெண்ணே, இம்மனிதன் உஜ்ஜினியிலிருந்து வந்திருப்பவன்—எனக்கு உண்மையாக இருப்பானா?

காஞ்ச:—பெருமாட்டி, இதுபற்றி அஞ்சவேண்டா. உன் குலத்தினர்பால் நல்லுறவு உடையவன்.

வத்ஸ:—வாஸவதத்தா, இக்கலைஞன் பெரிதுபேசுகின்றான். இவன் அதிசயத்திறமையைக் காண்போம். (அவளுடன் ஆதனத்தில் அமர்ந்து) ஐய, உன் கைவண்ணத்தைக் காட்டு.

ஸம்வரண:—அரசே, நின் ஆணை (மயிற் பீலியை அசைக்கின்றான்) அரியும் அரனும் அயனும், இந்திரனுடனே அமரர்களும், ஸித்தரும் வித்தியாதரரும், ஆகாயத்தின்கண் அகமகிழ்ந்து நடமாடுகின்றனர், பார். (அரசனும் அரசியும் ஆகாயத்தை நோக்கி அதிசயமுடன் எழுந்திருக்கின்றனர்.)

வத்ஸ:—என்ன ஆச்சரியம்!

வஸந்:—அஸாதாரணம்!

வாஸவ:—அதிசயம்!

வத்ஸ:—எனதன்பே, காண், பதுமத்திலமர்ந்துளன் பிரமதேவன். மின்னெறி சடையிற் பிறைமதி சூடிய சங்கரன் அவன்; வில்லும் வாளும் கதையும் சங்கும் ஏந்திய அரியே இவன். ஐராவதத்தமர்ந்த இந்திரன் இங்குளன். நூபுரங்கள் குலுங்கக்குலுங்க நடனஞ்செய்யும் வானரமகளிரோடு இனிதுவிளையாடும் இவ்வமரர்கணங்களைக் காண்.

வாஸவ:—இதனின் விந்தை வேறொன்றில்லை.

வஸந்:—(ஒரு புறமாய்) அடிமைமகன் இவ்விஞ்சையாளன்! எம்மை மகிழ்விக்கவேண்டுவானாயின், ஸாகரிகையை அன்றோ காட்டல்வேண்டும். இந்தக் கடவுளர்களைக் காட்டி என்ன பயன்.

[காவற்பெண்களில் ஒருத்தியாகிய வஸுந்தரை வருகிறாள்]

வஸுந்த:—அரசே, வேந்தன் விக்கிரமபாஹு தன் மந்திரி வஸுபூதியை நினது தூதனுடன் அனுப்பியுளன் என்று தெரிவிக்கும்படி நின் மந்திரத்தலைவன் யௌகந்தராயன் என்னை யனுப்பினான்.

வாஸவ:—தலைவ, இக்காட்சி இப்பொழுது போதும். வஸுபூதி மேன்மகன், என் மாதுலன்குலத்தைச் சேர்ந்தவன்; அவனைக் காக்கவைத்தல் அழகன்று.

வத்ஸ:—விஞ்சையில் வல்லோய்; நின் காட்சியைச் சற்றே ஒடுக்கிவை.

ஸம்வர:—(பீலியை அசைக்கின்றான்) நினதாணை. நீ காணத்தகுவன இன்னும் சில உள.

வத்ஸ:—பின்னர்ப் பார்ப்போம்.

வாஸவ:—காஞ்சனமாலா, இவனுக் குரிய பரிசில் கொடு.

காஞ்ச:—ஆணைப்படியே (மந்திரவாதியுடன் போகின்றாள்)

வத்ஸ:—(வஸந்தகனை நோக்கி) வஸுபூதியை அழைத்து வா.

(செல்கின்றனர்.)

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

7-ம் பத்து, 2-ம் தசகம்.

[763-வது பக்கத் தொடர்ச்சி]

5-ம் பாசுரம்

சிந்திக்குந் திசைக்குந் தேறுங் கைகூப்புந்
திருவரங்கத் துள்ளா யென்னும்
வந்திக்கு மாங்கே மழைக்கண் ணீர்மல்க
வந்திடா யென்றென்றே மயங்கும்
அந்திப்போ தவுண னுடலிடந் தானே
யலைகடல் கடைந்த வாரமுதே
சந்தித்துன் சரணஞ் சார்வதே வலித்த
தையலை மையல்செய் தானே.

அவதாரிகை:—மேற்படி நாயகியைப் பகவான் திருக்கண்கள்முன்பே அழைத்துச்சென்று அவள் தசையை நேரில்கண்டு நற்றாய் இரங்கவேண்டியவளாயினும், அவளது ஸ்திதியை இனியும் வற்புறுத்த அவளது வியஸநக்குறிகளை எடுத்துப்பேசித் தன் "தையலை மையல் செய்தவனே" என்கிறாள். முன் பாசுரத்தில் "பிரிவதில்லை" என்று பலமுறை பொய்கள் சொல்லியும், பிரிவுநேரும்போழ்து வெகு சீக்கிரம்வந்து தேறுதல் செய்வேனென்றும், வாக்களித்ததை முழுவதும் மறந்ததைப்பற்றி "வஞ்சகன்" என்னக் கோபித்த நற்றாய் இதிலும் தன் பெண்ணுக்கு இன்னமும் மையல்செய்து மோசம் செய்கின்றானேயென்று சீற்றங் கொண்டு பேசுகிறபடி.

குறிப்புக்கள் :— மூன்றாமடியின் கருத்து—ப்ரஹ்லாதனைக் காப்பாற்றுவதன் நிமித்தம் ஹிரண்யனைக் கொல்லப் பகவான் சந்தியாவேளையை எதிர்பார்க்க வேண்டிவந்தது. அமிர்தம்கடையு மக் காலத்திலும் இடம் பொருள் ஏவல் அமைக்கவேண்டி வந்தது. இவளைக் காப்பாற்ற இந்தத் துணைகளொன்றும் வேண்டாவே! தக்கணமே அருள்புரியக் கூடுமேயென்று காட்டுதல் நிமித்தம் "சார்வதே வலித்த" இப்பிராட்டி பகவானின் திருவடிகளை (சார்வதே) சேர்வதையே செய்யவேண்டுமென்ற மனவூக்கத்தால், தன் மனங் கரைந்துருகிப்போகாமல் "வன்மை செய்து" அதாவது திருடமாய் அவனிடத்தே ஊர்ஜித புத்தியைச் செய்து அவளது மனநிலை அவனிடத்தில் கெட்டிப்பட்டதென்று சொல்லுகிறபடி - தன் வியாகூல ஸ்திதியிலும் தன்மன முருகிப்போகாமல் தன்காதல்நிலை பெறக் காத்துக்கொண்டா ளென்றபடி.

பொழிப்புரை:—உன தழகையும் உன்னோடு பண்டு கலவிசெய்தபடியையும்நினைக்கும், நினையாமலே மோஹித்துக் கிடக்கும், தன் உணர்ச்சி வந்தவாறே தன் அபேக்ஷையைப்பெறுவதற்காக உன்னைத்தொழாநிற்கும், வியஸநம் பொறுக்கமாட்டாமல் திருவரங்கத்துள்ளாயென்று கூப்பிடும், நீ காத்துரக்ஷிக்கவிருக்கத் தனக்கு நாதன் இல்லாதவள்போலத் திருவடிகளிலே விழுந்துகிடக்கும்; இப்படிக் கிடக்கையில் கண்களில் நீர்மல்க வந்திடாயென்றே மயங்காநிற்கும்; உன் திருவடிகளையடைந்து ஒருக்கால் கலவைசெய்ய வேண்டுமென்றஆசையாலேயே தன்னை உள்ளவளாக மதித்திருக்கும், இப்பெண்பிள்ளையை இப்பாடுபடுத்தவேணு

மோ! உன்னுடைய நிரவதிகமான ஆச்ரிதரிடத்தில் உள்ள வாத்ஸல்யமும் கிருபையும் எங்கே போயிற்றென்கிறாள்"—ஆறாயிரப்படி.

6-ம் பாசுரம்.

மையல் செய்தென்னை மனங்கவர்ந் தானே
யென்னு மாமாயனே யென்னுஞ்
செய்யவாய் மணியே யென்னுந் தண்புனல்சூழ்
திருவரங்கத் துள்ளா யென்னும்
வெய்யவாள் தண்டு சங்குசக் கரம்வில்
லேந்தும் விண்ணோர் முதலென்னும்
பைகொள் பாம்பணையா யிவள்திறத் தருளாய்
பாவி யேன்செயற் பாலதே.

முதலடி:—சீதாபிராட்டியின் ஸ்தநத்தைத் தன்மூக்கினால் தீண்டினானென்று வெகு அல்பனான காகஸுரன்மேல் வலிதான பாணத்தை விட்டு அவனைமூன்று லோகங்களிலும் சுற்றி இரக்ஷிப்பவரைத்தேடி ஓடச்செய்த வொரு மோசடியான சூழ்ச்சியினால் தன்னையடுத்தவர்களை நன்றாக இரக்ஷிப்பானென்றும், இது சூது என்பது அறியாமல் பூர்ணமாய் நம்பின என்னை, மனங்கவர்ந்தான் - வஞ்சித்து என் மனம் முழுவதையும் அபஹரித்தவன் - குறிப்பு:—சென்ற பாசுரத்தில் "மையல் செய்தானே" என்றதற்குப் புத்தியறிவைக் கெடுத்து மோஹிக்கும்படி செய்தவனே" என்று அர்த்தம் எழுதியது இவ்விடத்திலும் ஒவ்வாதோ வென்னச் சங்கைப்படலாம். ஆனால் இப்படிப் பொருள்கொண்டால் புனருக்தி ஆகுமென்று திருக்குருகைபிரான் பிள்ளான் "அதியல்ப ஜெந்துவானஓர் காகத்தின் பக்கத்திலே பிரம்மாஸ்திரத்தை விட்டருளிய உன்னுடைய ஸர்வரையும் வசீகரணஞ் செய்யும் காதலியின் பக்கம் சிநேகத்தையும் ஆதரவையுஞ் செய்து காட்டிய குணத்தாலே என்மனசை அபகரித்தவனே" என உரையிட்டுள்ள ஸ்வாரஸியத்தை அநுசரித்து மேல்கண்ட அந்வயம் எழுதினோம். இவ்வந்வயத்தின்படி, "மையல் செய்து" "பிச்சேறியவன் வியாபாரத்தைச் செய்து" என்று அர்த்தம்." அரங்கநாதப் பெருமாள் இராமபிரான் காலத்திற்கு அடுத்த காலத்தவரானதால் "காகாசுர" விருத்தாந்தத்தைச் சுட்டுவதாகத் திருவுள்ளப்படுவது உசிதமே. மாயவனே - அதி ஆச்சரியமான ஸௌந்தரியமுள்ளவனே. நீலரத்னம் செந்தாமரைப்பூ பூத்தாற்போல் திருவுடம்பை யுடையவனே - அடியேனுக்கு உன்னைக் கொடுப்பதற்கென்றே திருவரங்கத்தில் கோவில் கொண்டவனே - வாள் தண்டு சக்கரம் சங்கு முதலாய ஆயுதங்களைத் தரித்திருப்பது பக்தர்களை இரக்ஷிப்பதன் நிமித்தமன்றோ? இப்படிக் கெல்லாமிருந்தும் இவள்பக்கம் கிருபை பண்ணவில்லை. இதற்குக்காரணம் "பாவியேன் செயல்பாலது- பாவியாகிய அடியேன் தீச்செயலில் உள்ளது - அதாவது முன் ஜென்மத்தில் அடியேன்செய்ததீவினையே யாமென்று இப்பிராட்டிதான், பகவானின் கிருபை தனக்கு உதவாமல் தன் தீச்செயல் தடுத்துவிடுகிறது என்று பழியைத் தானே ஏற்றுக்கொள்கிறாள்.

7-ம் பாசுரம்.

பால துன்பங்க ளின்பங்கள் படைத்தாய்
பற்றிலார் பற்ற நின்றானே
கால சக்கரத்தாய் கடலிடங் கொண்ட
கடல்வண்ணா கண்ணனே யென்னும்
சேல்கொள் தண்புனல் சூழ்திரு வரங்கத்தா
யென்னுமென் றீர்த்தனே யென்னும்
கோலமா மழைக்கண் பனிமல்க விருக்கு
மென்னுடைக் கோமளக் கொழுந்தே.

உரை:—என்னுடைய கோமளக் கொழுந்து - என்னுடைய அழகான பெண், கொழுந்து - படர்ந்து பரவும் கொடியின் நுனிபோல் தளிர்த்து மிருதுவாயிருப்பதுபற்றி; சிறிது குறைவுக்கும் வாடும் ஸுபாவமுள்ளவள். முதலடி:—பால - பங்கு, பக்கம்; துன்பங்களென்ன இன்பங்களென்ன இவ்விரண்டையும், படைத்தாய் - சிருஷ்டித்தவனே, அவரவர் செய்வினை நன்மை தீமைக் கேற்ப அவரவர்களுக்கு இன்பத்தையும் துயரத்தையும் ஏற்படுத்தினவனே, இப்படித் திட்டப்படுத்தியும், பற்றிலார் - உன்னிடத்தில் பக்தி கொஞ்சங்கூட இல்லாதவரானவருக்கும், (உதாஹரணமாக, தீங்கு செய்த காகாசுரனும்கூட) பற்ற - சரணமாகப் பற்றி உய்ய, நின்றானே - இரக்ஷிக்கிறவனே. சரியே, "உன்பாவங்கள் நம் அநுக்கிரஹத்துக்குத் தடையாகிற"தென்று திருவுள்ளமோ? கால- பக்தர்களின் பாவங்களுக்கு யமன் போன்று நிற்கிற, சக்கரத்தாய் - சக்கிராயுதத்தைத்தரித்திருக்கிறவனே; கடலிடம் கொண்ட - தூரமானவைகுண்டத்திலிருப்பவன் எப்படி யுதவஇயலுமென்றல்லவோபக்தர்கள் குறைகளை அப்போதப்போதே தொலைப்பதற்குப்பால் கடலில் வந்து தங்கி உதவுவனே, கடல்வண்ணா - குளிர்ந்த கிருபாநிதியே, கண்ணனே - கண்ணனாகவும் கோபாலபக்தர்களுக் குதவ அவதரித்தவனே, இதெல்லாம் பண்டைய காலத்து ஸம்பவமென்று ஏமாற்றப் போகாது; இப்போது, அரங்கத்தில் என் போலிகளுக்கு உதவுவதற்கே கோவில்கொண் டிருக்கிறாய்! என்னும் - என்று ஆக்ஷேப ஸமாதானங்களோடு தனது கதியை விண்ணப்பம் செய்யும்; தீர்த்தனே - ஸ்மரிப்பதினாலேயே சகல பாபங்களையும் தொலைக்க வல்லவனே; என்று இவ்வளவுஞ் சொல்லி மேல் துக்கத்தினால் பேசவும் முடியாமல், கண்ணீர்பொழிந்து அழும்.

தமிழ்ப்பாடம் 149.

[756-வது பக்கத் தொடர்ச்சி]

இலக்கணம்

லகர மெய்யீறு.

III. நிலைமொழி யிறுதியில் லகரமெய் + வருமொழி முதலில் வல்லினமெய்.

(A) நிலைமொழி யிறுதியில் லகரமெய் + வருமொழி முதலில் ககர சகர பகரங்கள்.

(a) (i) ஆறும்வேற்றுமைத் தொகையிலும் மற்ற வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகைகளிலும், பண்புத்தொகையிலும், உவமத்தொகையிலும், வருமொழிமுதலில் ககர சகர பகரங்கள் வர நிலைமொழியீற்று லகரமெய் றகரமெய்யாகத் திரியும் எனப் பொதுவாகக் கொள்ளலாம்.

முகில் + கருமை = முகிற்கருமை—6ம் வேற்றுமைத் தொகை.

தோல் + செருப்பு = தோற்செருப்பு--3ம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

வள்ளல் + குணம் = வள்ளற்குணம், பண்புத்தொகை

முகில் + குழல் = முகிற்குழல் - உவமத்தொகை.

ii. உருபுகள் விகுதிகள் ஆகிய இவைகளின் ஈற்றிலுள்ள லகரமெய், வருமொழிமுதலில் ககர சகர பகரங்கள் வர, றகரமாகத் திரியும்.

கண்ணால் + கண்டான் = கண்ணாற் கண்டான்.

காக்கையில் + கரியது = காக்கையிற் கரியது.

வீட்டில் + பார்த்தேன் = வீட்டிற் பார்த்தேன்.

சொன்னால் + செய்வேன் = சொன்னாற் செய்வேன்.

பொன்போல் + சிவந்தது = பொன்போற் சிவந்தது.

iii. எழுவாய்த்தொடரில், நிலைமொழியீற்று லகரமெய் வருமொழிமுதல் ககர சகர பகரங்களோடு றகரமாகத் திரிந்தேனும் திரியாமல் இயல்பாகவேனும் புணரலாம்:—

மணல் + சிறிது = மணற்சிறிது, மணல் சிறிது.

தழல் + கொடிது = தழற்கொடிது, தழல்கொடிது.

(b) (1) வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, உம்மைத்தொகை, வினைமுற்றுத்தொடர், அடுக்குத்தொடர் ஆகிய இவைகளின் ஈற்றிலுள்ள லகரமெய், வருமொழிமுதலில் ககர சகர பகரங்கள் வர, பெரும்பாலும் றகரமாகத் திரியாது.

முகில் + பார்த்தான் = முகில் பார்த்தான் — 2-ம் வேற்றுத் தொகை.

கொல் + களிறு = கொல்களிறு--வினைத்தொகை.

கால் + கை, பல் + கண் = கால் கை, பல் கண்–உம்மைத் தொகை.

பேசேல் + பாவாய் = பேசேல் பாவாய்—வினைமுற்றுத்தொடர்.

சொல் + சொல் = சொல் சொல்—அடுக்குத் தொடர்.

குறிப்பு:—நெல், செல் (மேகம்), வில், சொல், போன்ற முதலெழுத்துக் குறிலாலாய ஈரெழுத்துப் பெயர்ச்சொற்கள்சிலவற்றின் ஈற்றிலுள்ள லகரமெய், வருமொழிமுதலில் ககர சகர பகரங்கள் வர, உம்மைத் தொகையிலும் அடுக்குத் தொடரிலுந் தவிர மற்றத் தொடர்களிலெல்லாம் றகரமாகத் திரிந்து புணரும்.

நெல் + பழுத்தது = நெற்பழுத்தது. }
செல் + கருத்தது = செற்கருத்தது. } எழுவாய்த்தொடர்.

வில் + பிடித்தான் = விற்பிடித்தான் }
சொல் + பகர்ந்தான் = சொற்பகர்ந்தான். } இரண்டாம் வேற்றுமைத்தொகை.

குறிப்பு:—வில் + கணை, என்பது வில்லும் கணையும் என்று விரியும் உம்மைத் தொகையாயின் வில் கணை என்றும், வில்லிலிருந்து வரும் கணை எனவிரியும் ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையாயின் விற்கணை யென்றும் புணரும்.

(2) கொல், அந்தில் போன்ற அசைநிலைகளின் ஈற்றிலுள்ள லகரமெய், வருமொழி முதலில் ககர சகர பகரங்கள் வர, றகரமாகத் திரியாது.

செல்லுங்கொல் + குமரன் = செல்லுங்கொல்குமரன்

அந்தில் + கழலினன் = அந்தில் கழலினன்.

குறிப்பு:—ஆல், என்னும் அசைச்சொல்லின் ஈற்றிலுள்ள லகரமெய், வருமொழி முதலில் க ச ப வர, றகரமாகத் திரியலாம்.

மிளிர்ந்ததால் + கருநீலக்கண் = மிளிர்ந்ததாற் கருநீலக்கண்

(3) இன்மை தொன்மை நிறைவு ஆகிய பொருள்களில் வரும், இல் தொல் சால் என்னுஞ் சொற்களின் ஈற்றிலுள்ள லகரமெய், வருமொழி முதலில் ககர சகர பகரங்கள் வர, றகரமாகத் திரியாது.

இல் + பொருள் = இல்பொருள்

தொல் + புகழ் = தொல்புகழ்

மதிசால் + கருமம் = மதிசால் கருமம்.

(B) நிலைமொழியிறுதியில் லகரமெய் + வருமொழி முதலில் தகரமெய்.

(1) நிலைமொழி யிறுதியில் லகரமெய் நிற்க, வருமொழி முதலில் ககர சகர பகரங்கள் வருங்கால், எவ்வெவ்விடங்களில் முன்னுரைத்த விதிகளின்படி அந்த லகரமெய் றகரமெய்யாகத் திரியுமோ, அவ்விடங்களிலெல்லாம் தகரமெய்வந்தாலும் றகரமாகத் திரியும். ஆனால் நிலைமொழியீற்று லகரமெய் மாத்திரமன்றி வருமொழிமுதல் தகர மெய்யுங்கூட றகரமெய்யாகத் திரியும்.

முகில் + கருமை = முகிற்கருமை.
முகில் + தொன்மை = முகிற்றொன்மை.
தோல் + செருப்பு = தோற்செருப்பு.
தோல் + தட்டு = தோற்றட்டு.

வள்ளல் + குணம் = வள்ளற் குணம்
வள்ளல் + தன்மை = வள்ளற்றன்மை

முகில் + குழல் = முகிற்குழல்.
முகில் + தோகை = முகிற்றோகை

கையால் + பிடித்தான் = கையாற் பிடித்தான்
கையால் + தொட்டான் = கையாற்றொட்டான்.

பொன்போல் + சிவந்தது = பொன்போற் சிவந்தது.
பொன்போல் + திகழ்ந்தது = பொன்போற்றிகழ்ந்தது

(2) வருமொழிமுதலில் ககர சகர பகரங்கள் வர, நிலைமொழி யீற்று லகரமெய் எவ்வெவ்விடங்களில் றகரமெய்யாகத்திரியாதோ, அவ்விடங்களிலெல்லாம் வருமொழி முதல் தகரம் வர, அத்தகரம் மாத்திரம் றகரமாகத்திரிவதுடன் நிலைமொழியீற்று லகர மெய்யும் கெட்டுவிடும் எனக்கொள்க.

கோல் + பிடித்தான் = கோல்பிடித்தான்.
கோல் + துறந்தான் = கோறுறந்தான்.

உழல் + கருத்து = உழல் கருத்து
உழல் + தன்னுயிர் = உழறன்னுயிர்

தண்மைசால் + கண் = தண்மைசால் கண்
தண்மைசால் + தடங்கள் = தண்மைசா றடங்கள்

தோன்றல் + காண் = தோன்றல் காண்
தோன்றல் + தோன்றாய் = தோன்றாறோன்றாய்

இப்படியே, மற்ற உதாரணங்களும் அமைத்துப் பயின்றுகொள்க.

தருமன் மாண்பு

[764-வது பக்கத் தொடர்ச்சி]

இவ்வாறு தனது அறத்தையும், அதை மணந்த பொறையையும் தான் எவ்வகையிலும் காப்பாற்ற இயலும் என்னும் சீரிய பொருள் பொதிந்த வாழ்க்கையே இத்தருமனது வாழ்க்கையாகும். இதுவரையில் கூறியது போதுமெனினும், அக்கொள்கையை நன்குவிளக்க வேறொரு அரிய சான்று காட்டுவேன். விராட நகரத்தில் தருமனும் விராடனும் கவறுநிகையில், தூதர் உத்தரனது வெற்றிச்செய்தியை வந்துரைப்ப, அரசனும் மிகப் பொங்கினான். ஆனால் அரசனை வீணாகப் பொய்ம்மை மகிழ்ச்சியில் வைத்திருப்பது தகாதென்று கண்டு, யுதிட்டிரனும், 'நின்மகன் வெற்றியடைவது எங்ஙனம்? எம்பியன்றோ அதற்குக் காரணம்?' என்று கூற, மற்றவன் மதியானாய், 'பேடி வென்றதுபொய்' எனக் கூறினான். இப்போது அரசனை மறுத்தால் அரசனது சினத்திற்கு ஆளாகவேண்டுமன்றோ? ஆயினும், அதற்குப் பயந்து உண்மை கூறாவிட்டால் தனது நுண்மையாய க்ஷத்திரிய தருமமும் அழியுமன்றோ? ஆதலின் வருவதை ஏற்றுக்கொள்ள நினைத்துத் தனது உரையைப் பின்னும் பயிற்றினான். பயிற்றவே, அரசனும் சினமூண்டு கவறும் பகடையினால் தருமனை முகத்தில் இரத்தம் சொட்டும்படி அடித்தான். தனதுநண்பனுக்குத்தீங்கு விளைத்தல் அதருமமாதலின், 'கண்மலரிற் கைபடாதோ' என்று உற்றுரை அணைத்துக்கொள்ளும் அச்செம்மல், தனதுபொறையும், எளிமையும் (ஸௌலப்யம்) ஒருங்கே காட்டி நின்றான். இப்படி இவ்வளவு ஆண்மையையும் பொறையையும் அறத்தினையும் ஸௌலப்யத்தையும், ஊனுங் குருதியும் போர்த்த ஒரு உடலில் — குருதிதான் முகத்தில் திலகமிட்டதுபோல் சொட்டிக்கொண்டிருக்கின்றதே—வைத்து நம் அகக்கண்முன் திகழவைக்கும் பாரதஆசிரியனது ஆற்றலை வியந்து முடியாது.

ஆனால் கொள்கைகளெல்லாம் கொள்கைகளே; அவை மூத்துப்போவதும் உண்டு.

மூத்தது கொள்கை போலாம்
இராவணன் வாழ்ந்த வாழ்க்கை *

என்று அற்புதமாகப் பாடினான் கம்பநாடன். ஆனால் 'சத்தியத்திற்குப்பரமானதொன்றில்லை; எதுபரமானதோ அதுவே சத்தியம்;' என்னும் கொள்கைகள் முக்கால உண்மைகளே. அவை மூத்துவிடமாட்டா. ஆதலின் நான் இங்குக் கூறவந்தது யாவதெனின், எக்கொள்கையினும் தீவிர நம்பிக்கை யுடையோம் எனினும் அச்சமும் நாம் கொள்ளவேண்டிய கொள்கையாகும். 'அஞ்சுவ தோரும் அறனே' என்பது குறள். "தைரியத்தைவிட அச்சமே இன்னும் ஆழ்ந்த உள்ளுணர்ச்சிகளைப் பற்றியதாகும்" என்று ஆங்கில ஆசிரியர் தாமஸ் ஹார்டி கூறியதை இங்கு நினைப்பூட்டிக்கொள்க. அச்சத்தின் பெருமை விரிக்கவும் பெரிதே. அவ்வச்சந்தான் நைச்சியபாவத்திற்கு அடிப்படையான உணர்ச்சியாகும். 'நாம் பெரியோமல்லோம், நன்றும்தீதும் நமக்குரைப்பார் உளரென்றுநாடுவோமே' என்பதிலுள்ள நைச்சியபாவம் அச்சத்தினால் பிறந்ததே யாகும். ஆதலின் குறளைக்கூடப் பின்வருமாறு திருத்தி யமைக்கலாம்.

அச்சம் அமரருள் உய்க்கும்; அதுவிலாமை
ஆரிருளில் ஆழ்த்தி விடும்.

என்றவாறு. ஆம்; பரஞ்சோதியின் கூறுகளாகிய அறம் முதலிய ஒளிகள் இவ் விருள்கவிந்தமாஞாலத்தில் மங்கி விளங்குகின்றமையின், அவ் வொளிவழியே நாடுவோர் அச்சமென்னும் கயிறு பிடித்தே இப்பிலத்தினின்றும் வெளியேறக் கடவர். அவ் வச்சமின்மை ஆரிருளில் ஆழ்த்தியேவிடும். நிற்க, எத்தகைய செயல்வரினும் அறத்தைக் காப்பாற்றிவிடலாம் என்பதே தருமனது திடக்கோளன்றோ? உலக முழுதும் அதில் அடங்கியுள்ளதென்பது அவனுக்கு அனுபவங்களால் ஏற்பட்ட கற்பனை. ஆதலின் துரியோதனன் தனது, மிகக்குறைந்தவேண்டுகோள்களைச் சிறிது மதியாமல் கண்ணனைத் திருப்பியனுப்பியதும், தருமன் கொண்ட சினத்தைக் கவிஞர் கூறுவார்:—

முகுந்தன் வாசகம் கேட்பதன் முன்னமே
முரசுயர்த் தவன்முன்னி
மிகுந்த கோபமோ டிக்கணம் முடிப்பன்யான்
வெம்பகை யினிதென்ன.

---

* மூத்தது கொள்கை—Antiquated theory என்ற மொழிபெயரும். தத்துவக் கொள்கைகள் ஆராய்ச்சியின் வளர்ச்சியினால் அடிக்கடி மூத்துப் போகின்றன. ஆனால் கவிதைக்கொள்கைகளிலோ கருத்தே பிரதானமாதலால் அவை மூத்துவிடமாட்டா. (For poetry the idea is the thing) ஆதலின் தத்துவம் பொய், கவிதையே மெய் (Poetry is the reality, philosophy the illusion.) என ஆங்கிலப்புலவர் ஆர்னல்ட் கூறுகிறார்.

இச்சினம் அவனது கொள்கைத் திடத்தினுல் பிறந்த [illegible]சினமாகும். தான் அத்துணையும் உடன்பட்டும் தன் பிழைபடாதஅறத்தை எதிர்க்க ஒருவனுளனே என்னும் மமகாரமாகும்.பிறகு பலநாடுகளினின்றும் சேனைகள் திரளவும் தருமனுக்குத் திட மதிகமாயிற்று. போரில் அத்திடத்தைத் தகர்க்கத்தக்க நிகழ்ச்சிகள் நேரவில்லை. பிதாமகன் பட்டான்; கௌரவரிற் பலர் பட்டனர்; பன்னிரண்டாம்நாள் போரில் வில்லாசிரியனே தருமனுக்குப் புறங்கொடுத்தோடினன்; இந்நிகழ்ச்சிகள் அவனது திடத்தைப் பின்னும் பெருக்கின ஆதலின் சுயோதனன்மீது உள்ள குரோதம் சிறிதும் மாறவில்லை. பதின்மூன்றாம்நாள் அபிமன் பட்டபோது, தருமன்,

சுயோதனன்தன் மகனவனை விடங்கா லம்பிற்
கொன்றனையே நின்னுண்மை மீண்டுரைக்கக் †
கூசினையோ குமர ரேறே.

என்றழுதபோது, இலக்கணகுமரன் இறந்ததில் எவ்வளவு திருப்தியுடையான் என்பது நன்குவிளங்கும். இத்தருமனே முன் 'கண்மலரிற் கைபடாதோ' என்று கூறியவன். தருமனது இதய சுருதி கட்டையாய் விட்டது போலும்! அபிமன் பட்டது ஆற்றுமைதந்ததெனினும் கண்ணபிரானது உரைகள் அவனைத் தேற்றின. சயிந்தவனைத் தலைதள்ளியமறுநாள் துரோணனும் பட்டான். பதினாறும் நாள் அங்கர்கோன் சேனைநாதனாக நின்றபோதுதான், போரினில் முதல் முதலாகத் தருமனும் சுயோதனனும் சந்தித்தனர். அப்போது தருமன் புகன்ற உரை அவனது செருக்கென்று கூறலாகாது; ஏனெனில் செருக்கென்பதில் ஒருகூறு கூட அவன் பண்பில் இல்லை,—அவனது குரோதத்தையே எடுத்துக்காட்டும்.

அளிவந்த மாலை யரசர் அவையினுன்
அதிவஞ்ச மாமன் அவனி கவர்வுற
வெளிவந்த சூது பொருத விரகரி
தெளிதின்று பூசல் எனமுன் விரவினை.

(சூதாடுதலைப்போல் அவ்வளவு எளிதென்று இப்போரினை நினைத்தாய் போலும்; படு நின் வினையினுல், என்றபடி.) அத்தகைய சினம் அவனது இயற்கையான அருள்குணத்திற்கு எவ்வளவு மாறுனதென்பது எளிதில் விளங்கும். ஆதலினுல், மற்றும் நாள் அத்திடத்தைத் தகர்க்க இரு நிகழ்ச்சிகள் உதவின. கர்ணன் யாவரையும் சமரில் உழக்கித் தருமனையும் எதிர்த்துப் புறந்தந் தோடச் செய்தனன். அப்போது தருமனது ஆண்மை சிதைந்தது. உடனே கண்ணனும், 'பொறையுடை, புகழுடைய எல்லாம் பொன்றநீ போருடைந்தோடுதல் தகா'தெனக் குத்திமொழிந்தான். எல்லாம் தானெண்ணியபடியே இதுவரையில் நடந்துவர, 'இப்போது போரில் பங்கப்பட நேர்ந்ததே' என்று விசனமுற்றேகினன் தருமன். சிறிது நேரத்திற்கெல்லாம், விசயன் அவனது தோல்வியைக் கேட்டுப் பதைத்து அவனை நண்ணியபோதும், பாஞ்சாலியைத் துகிலுரிந்தபோதும் கூட அவனை விடாத பொறை இப்போது அவனை விட்டேக, 'நின் கையில் என்ன வில்' என்னக் கிரீடியைப் பார்த்து ஆத்திரத்துடன் மொழிந்தான். விசயனும் கோபம் கொள்ளத் தருமனும் 'துறவுபூண்பேன்' எனக்கூறி நடந்தனன். இவ்வாறு அப் பொறைத்தேவதை நிதானமற்றுடியதும் விதிவகையே. ஆனுல் எதிர்பாராத நிகழ்ச்சிகள் அத்துடன் நிற்கவில்லை. அன்றிரவு தன்னைத் தோல்விகண்ட அப்பெருமகன் தன் அண்ணனென்றறிந்ததும் தருமனுக்கு, ஷேக்ஸ்பியர் நாடகத்தில் ஹாம்லட்கூறிய, 'உனது தத்துவத்துக்குப் புறம்பான பலஉண்மைகள் இப்பிரபஞ்சத்தில் உள' என்னும் உண்மை தெளிந்து அச்சத்தைப் புகுத்திற்று. அவ்வச்சம் புகவே அவனும் புனிதனானான். மற்றும்நாட்காலை சல்லியன் படையெடுத்து வந்தபோதுஎந்நாளும் அச்சமுறாத அத்தருமன், 'இம்மாபெரும் படையைஎப்படிநாம் எதிர்ப்பது'' என்று கூறினன். பிரபஞ்ச கதாநாயகனும் கண்முகிழ்த்தான்.

இன்னவாறு அச்சம் ஏற்பட்டதுதான் அத்தருமனை முழுதும்துய்யனுக்கியது. இங்குத் தருமனுக்கு அச்சம் வரவேண்டியதின் அவசிய மென்னவெனில், அஃதில்லாவிடின் அவனது அருள் பொன்றிவிடும். இதுவரையில் அவனது அறத்தினையும் பொறையினையும் பற்றியே இங்கு விரிவாக எடுத்துரைத்தேன். ஆனுல் அவனது மாண்பிற் சிறந்து விளங்குவது அருளென்னும் ஒளியேயாகும் என்பதை நாம் கருத வேண்டும்.

அறமொன் றின்றிப் பெருஞ்சமரம் விளைக்குமது
கடனன் றென் றருள்வெள்ளம் பெருகக் கூறும்.

என்றதில் தருமனது அருள் துறவியின் அருளையே நிகர்த்து விளங்கக் காணலாம்.

குரவரையும் கிளைஞரையும் குலத்துரிய
துணைவரையும் கொன்று போர்வென்
றரவநெடுங் கடலாடை அவனியெலாம்
தனியாளும் அரசு தன்னில்
காவுறையும் மனத்தாதை முனிக்குரைத்த
மொழிப்படியே கானந் தோறும்
இரவுபகல் பலமூல சாகநுகர்ந்
துயிர்வாழ்தல் இனிது நன்றே.

என்று கூறிய உரைகளும் அருள் வெள்ளமே. [illegible]யிர்க்கெல்லாம் அளிக்கவேண்டிய அவ்வன்பைத் தருமன் துரியோதனன் மகனுக்கு மறுத்து அபிமனுக்குத் தந்தது அவ்வருட்குக் கேடுசூழ்வதன்றே? அத்தகைய அருள் பொன்றுவது அவனது அறம்பொன்றுவதைவிடக் குறைந்த பிரமாத முடையதா? பரிதியிலும் வடுக்களுண்டன்றே? அவ்வடுக்களைய, பதினேழாம் நாள் மேற்கூறிய இரண்டு நிகழ்ச்சிகளும் உதவின. அவை நிகழ்ந்ததும் மற்றும் நாள் தருமன் சுயோதனனைப் பார்த்து,

என்துணைவர் என்னோடும் ஏவியநின் தொழில்புரிய
வன்துணையாய்ச்சேவிப்பமடங்கலாசனமேறி [illegible]
இன்துணைவர் குருகுலத்தார் எனுமிசைபோய்த் திசை
நன் துணைவா ஆளுதியோ ஞாலமெலாநின் குடைக்கீழ்

என்று கூறிய அருள்கனிந்த நிலையில் அவனைக் கண்டு நிற்போம்.

சூளாமணி

[734வது பக்கத் தொடர்ச்சி]

இரதநூபுரச் சருக்கம்

நங்கையாம் கொடி வளர்கிறது; அதிலே காமமோகொத்தாக அரும்புவிடுகிறது. மங்கைப்பருவம் வந்தடைகிறது. இன்னும் மேலே மேலே இவ்வாறே வளர நிற்கின்றது அவ்வழகிய கொடி. இவ்வாறிருக்கின்ற காலத்திலே, ஒரு நாள், அரசனெதிரே ஒரு பெண் வருகின்றுள். வசந்ததிலகைஎன்று அவளைச் சிறப்பித்துச்சொல்கின்றனர் அங்குள்ளார். இளவேனிற்காலத்திற்கே பொட்டிட்டாற்போன்றுள் எனப் பொருள்படும் பெயர்படைத்த இத்தோழி எந்தநிலையில் காண்கின்றுள் அவ்வரசனை. பைங்கண்படைத்த பெரியதோர் யானைமீது செல்லும் மறம்மிக்க மனத்தோடே மன்னவன் விளங்குகின்றுன். மறம் மிக்க யானைமீது செல்லும் மனத்தை இன்பமிக்க இளவேனிற் பூத்த இளமரக்காவில் இழுத்துச் செல்லும் மென்மொழி ஓதுகின்றுள். "வாழிய அரசே, பெரும் பொழுதுகளில் வைத்துத் தலைசிறந்ததாய் வேறோர் அடையும் இன்றிப் 'பொழுது' என்றே சொல்லத்தக்க இளவேனிற் காலம் வந்து நிலைபெற்றுத் தங்கியுள்ளது'' என்கிறுள்.

43.மேலே,தான்சொன்னதற்குவிரிவுரைசெய்கிறுள். வயந்ததிலகைக் கன்றோ வயந்தகாலச் சிறப்புத் தெரியும். "மறயானைமீது செல்லும் மனம்கொண்ட மன்னவா! நீயோமன்னர்மன்னன்: மறக்குறியாக அணிந்து விளங்கும் கழலும் உன்னுேடும் பிறந்ததே போலக் காலிற்செறிந்து விளங்குகின்றது. ஆதலின் மறயானைகளின்மீது உன்மனம்போதல்வேண்டா. தேன் பொழியும் மலர்மாலையை இன்பக்குறியாய் அணிந்துள்ளாய். அம்மாலை என்ன அழகாகஅசைகின்றது! அதனிற்கேற்ப நீ, இன்ப மூட்டும் இளமரக் காவை வந்துகாண். நீ காணுதவரையில் அக்காவின் அழகு அழகாகாது வீணுகியன்றோ ஒழிகிறது. அப்பொழிலின் இடத்தே கோங்கம் பூக்கள் விளக்கத்தோடும் மலர்ந்து தேன் துளியை விடாது பொழிந்து தூவுகின்றன. மரத்தின் புறமெல்லாம் செம்பொன்னுகப் பூத்துநிற்கின்றன அக் கோங்கமரங்கள். குணமிலார் செல்வம் நாய்கொண்ட தெங்கம் பழமாய்ப் புகழ்ழுணமின்றிப் பயன்படாது வீணே கிடப்பது போல இப்பூக்களும் நறுமண மென்பதின்றி வாளா கிடக்கின்றன. இவ்வாறு நறுமணங் கமழும் நல்லமலர்களைதொட்டு நறுமணமற்ற வெறுமலர் வரையினும் எங்குமாய்ப் பரந்து விரிந்துளது இளவேனிற்காலம். இவற்றை நீ காண்டலால் குணமுளான் செல்வமே போலப் பயனடைந்து, நின் தேங்கம ழுயிர்ப்பான் நறுமணமும் கமழப்பெறுவனவர் மன்றோ?

44. இளவேனிற் காலமன்றோ வேனிலான் எனப் பெயர்பெற்ற காமன் வெற்றிபெறும்காலம். அவனுடையபடைவீடாகிய பொழிலில் வெற்றித்திருவிழா [illegible]றுகிறது. அவ்வெற்றியினுல் தம்மைமறந்து உவகைபூத்த பொழில்கள் மயிர்க்கூச்செறிந்து நின்றாற்போலப் பூங்கொத்துக்களைப் பூத்து நிற்கின்றன. உவகையாலும் அன்பாலும் அப்பூங்கொத்துக்களாலும் வருவோரை இனிதுவரவேற்கும் மெல்லியலார் என ஒசிந்து நிற்கின்றன அவை. நீலமணி போலும் வண்டுகள் அனைத்தும் விருந்தினர்களாக உட்புகுகின்றன. அவற்றினெதிரே தேனெழுகும் பூங்கொத்துக்களை அப்பொழில்கள் எதிர் ஏந்திநின்று வரவேற்கின்றன. நீரிடை குளிப்பதேபோல அம்மலரிடை குளிக்கின்றன அவ்வண்டுகள். குளித்த களிப்புத்தீர நறுந்தேனை வாயில் வழிய வழியக் குடிக்கின்றன. தம்மைக்கண்டு மகிழ்பூத்து நிற்கும் தம்முடைய வாழ்க்கைத் துணையாம் பெண்வண்டுகளோடும் விளையாடுகின்றன. தேன்கொண்டு ஊற்றெடுக்கும் அழகுநிறைந்த மாம்பூம் கொத்துக்களின்மேலே இணைபிரியாது இன்பத்துடன் ஏறி மிதிக்கின்றன. இம்மிதித்தலைப் பொறுக்கமாட்டாத அம் மெல்லிய மாம்பூங்கொத்துக்கள் தலைசாய்கின்றன. இவ்வாறுமதர்த்துக் களித்தன இவ்வண்டுகள்.

45. இவ்வண்டுகளே பாணர்கள். காமனது பாண்படை இருந்தபடி ஈது. தம்மரசனை இவைகளும் பாடுகின்றன. தனக்குக் காவலாக அமைந்து விளக்கத்தோடும் அழகோடும் பொலியும் மலரம்பு கொண்ட மன்மதன் இவ் வேனிற்காலத்தே எவ்வுலகையும் வென்று கழல்அணிகின்றுன். அவ்வாறு விளங்கும் திருவடிகளைப் பரவித் தொழுகின்றது இந்தப்பாண்படை. அழகுபடிந்துள்ள மலர்களில் வீழ்ந்து பாடுகின்ற இவ்வண்டுகள் இடையீடின்றிப் பாடாநிற்கின்றன. இப்பாண்படைக்கு உண்டாட்டும் நடக்கின்றது. கொடிகள் எனும் மகளிர் தேன்வழியும் மலர் என்னும் கிண்ணத்திலே தேன் கொண்டுவந்து அப்பாண்படையெதிரே ஏந்தி நிற்கின்றனர். "பொலிவுஉடைய இக்கள்ளை (பூவின்கள்ளை)குடைந்து குடைந்து குடியுங்கள்'' என்று அசைந்து அழைத்து ஊட்டுகின்றனர்; அவ்வண்டுகளாம் பாணரும் வாய்மடுக்கின்றனர்.

46. அழகியவிளக்குக்களை ஏற்றிவைத்தாற்போல முருக்கம்பூக்கள் செக்கச்சிவந்து அழகாகமலர்ந்து கொம்புகளி லணிஅணியாக விளங்குகின்றன. தங்க இடம்பெறுதவண்டுகள் நெருக்குண்டு அப்பூக்களின்மேல் விழுந்து மிதிக்கின்றன. இந்தத் தோற்றம் எங்ஙனம் உள்ளது? மேலே புகைபோலமுகில்கள் தவழ, பழகியவர்களும் வழிதெரியாமல் மயங்கும் அந்தக் கானத்திலே, செக்கச்சிவந்த சுடர் கொழுந்துவிட்டெரியச் செந்தீ எங்கும் பரவியபோது கருநெருப்பாம்கரித்துண்டுகளெழுந்தெழுந்துவிழுவதேபோல விளங்குகிறது இக்காட்சி.

47. அசோகம்தளிராலும் அழகியது,பூவாலும் அழகியது;அவ்வழகுக்கண்ட வண்டுகள் நாவில் தேனூற அவாவினேடும் அருகு செல்கின்[illegible] வாத் தளிரும் பூவும் செ[illegible]

m 211, N28KN
N34.7.49
199199

றன. நெருப்பெனஎண்ணியதும்வெப்பமும் மேலே வீசுவதுபோல அவ்வண்டுகளுக்குத் தோன்றுகிறது. அடிமுதல் முடிவரையும் தளிர்த்துப் பூத்திருக்கிற இவ்வழகிய அசோக மரம், நெருப்புக்குன்றமே என முடிவுசெய்கின்றன. மனத்தகத்தே மறுவற்ற இவ்வண்டுகள் வெருவியோட முற்படுகின்றன. மறுவற்ற மனம்வாடலாகுமோ? தென்றல் வீசுகின்றது; பூவும் தளிர்களும் அசைகின்றன. கொத்துக்களிலிருந்தும் வெளிவந்ததேன்துளிஇவ்வண்டுகள்மேலே விழுகின்றது. நாக்கில்படுகின்றது; தீப்பொறி என எரிக்காது தேனென இனிக்கிறது. உடலில்படுகின்றது; உடல் கொப்புளம் கொள்ளவில்லை. உடலொடு உள்ளமும் குளிரக்குளிர்ந்து விளங்குகிறது. மயக்க உணர்வு நீங்கி விடுகின்றது. இது "நெருப்புமலையல்ல, மலர்மலையே" எனத்தெளிகின்றன. மேலே செல்கின்றன. பூவிலே தாம் விரும்பியதை அடைகின்றன.

அண்டங்கள்

[767-வது பக்கத் தொடர்ச்சி]

"முதல்வன் கொண்ட திருமேனிகளிற் சில திருமேனி போகவடிவமும், சில திருமேனி கோரவடிவமும், சில திருமேனி யோகவடிவமுமாக நிற்பன. இவை, முறையே, உயிர்கட்குப் போகம் புரிதற்பொருட்டும், வினையினை வீட்டுதற்பொருட்டும், யோகமுத்தி யுதவுதற்பொருட்டுமாம்", என்றார், உரையாசிரியர். அதன்பின் வரும்செய்யுளில் இவ்வாறு மாறுபட்ட பல வேடம் ஒருவனே கொண்டு நின்றலால் உலக நீங்கி நின்றனன் என்று கூறுகிறார்.

ஒன்றொடொன் றொவ்வா வேடம்
ஒருவனே தரித்துக் கொண்டு
நின்றலால் உலக நீங்கி
நின்றனன் என்று மோரார்
அன்றிஅவ் வேட மெல்லாம்
அருள்புரி தொழிலென் றோரார்
கொன்றது வினையைக் கொன்று
நின்றஅக் குணமென் றோரார்".

சிவஞான சித்தியார்—முதற் சூத்திரம்

இவ் வேகவடிவே எல்லா அண்டங்களிலுமுள்ள இயக்கத்தின் வேகத்திற்கு அடிப்படையாம். யோகவடிவத்தைப் பற்றிப்பின்னர்க்கூறுவோம். போகவடிவாய்த் திகழ்வது, அண்ட சராசரம் முழுவதும் சிவசக்தி ரூபமாய்த் திகழ்வதேயாம். ஒரு முட்டையை உடைப்பின்அதனில் வெண்மையான பாகமும்(Albumen) மஞ்சளான பாகமும்(Yoke) சிவ சக்தி மயமாகக்காணப்படும். நமது உலகம் அண்டமென்றும் அதைப் பூமாதேவி யென்றும் அதன் கணவன் எங்கும் வியாபகனானவன் (விஷ்ணு) என்றும் மேலோர் கூறுவர். விஷ்ணு பூதேவி சம்பந்தத்தாலே ஸ்தாவர ஜங்கமத்தில் காணப்படும் ஜீவராசிகள் அனைத்தும் இந்நில உலகத்தில் பிறந்தன. இரணிய கர்பத்தினிடத்திருந்து இவ்வுலகம் வந்ததென்று புராணம் கூறும். வராகமூர்த்தி சுருண்ட உலகத்தை விரித்து மேலுக்குக்கொண்டுவந்தாரென்றும் கூறும். ஆதலாலிவ்வுலகமும் அதற்குள்ள தாழ்ந்த அந்தஸ்துக்களான பலவகை ஜீவராசிகளும், ஒவ்வொன்றும் அண்டமயமாகவே காணப்படுகின்றது. ஆலின் சிறுவிதையும் ஒரு அண்டமே. ஆனால் ஒருஅண்டத்தின் உற்பத்தி மற்றொரு அண்டத்தில் காணப்பட்டாலும் படும், படாவிட்டாலும் இல்லை. இப்போது நமது சூரியனைச் சுற்றி ஓடுகின்ற கோளங்களில் பூமி ஒன்றென்று அறிகின்றோம். இதுபோன்ற உலகம் இந்நட்சத்திர இராசிகளில்ஒன்றோ பலவோ அமைந்திருக்கலாம். இதே மாதிரியான உலகம், இதே மாதிரியான தோற்றம் இதே ஜனக்கூட்டம், இதே இடம் இன்னொரு உலகத்தில் இக்காலத்திலேயே காணப்படவும் கூடும். ஞானவாசிஷ்டத்தில் லீலை கதையில் லீலையானவள் தன்னைப்போன்ற லீலையை இன்னொரு உலகத்தில்கண்டது நாம்நினைப்பதுபோல அத்துணை கற்பனை யன்றென்னக் ககோளசாஸ்திரத்தினின்று அனுமானிக்கலாம்.

இவ்வாறு அண்டங்களில் உலகத்தினின்று பெரிதுக்குப் பெரிதாய்க் காணக்கூடியதோற்றங்கள்பல்லாயிரவெளிச்சமயில்கள் உள்ளன. நாம் தூரதிருஷ்டிக் கண்ணாடியால் காண்பதுபோல அண்டங்களில் சிறியதற்குச் சிறிய பல பூதக்கண்ணாடியில் கண்டு அவ்வற்புதங்களையும் களிக்கின்றோம்.

அண்டங்களில் முதலாக இப்பூவுலகத்தை எடுத்துக்கொண்டோம். இப்பாரிலே நமது கண்ணுக்குத் புலப்படும் ஜீவராசிகளில் மிகச்சிறியதான எறும்பை எடுத்துக்கொள்வோம். எறும்பைப் பற்றியும் எறும்பின் முட்டையைப் பற்றியும் இலக்கணத்தில் காலவழுவினமைதிக்கு உதாரணம் கேட்டிருக்கின்றோம். "எறும்பு முட்டைகொண்டு திட்டை ஏறின் மழை பெய்தது." நம்மால் நிர்ணயிக்கக்கூடாத எதிர்கால மழையை எறும்புகள் கண்டுணர்ந்து தங்கள் முட்டைகளை நனையாத இடம்தேடி எடுத்துச்செல்லும். ஆதலால் அச்செய்கையைக் கண்டதும் வானசாஸ்திரிகளும் அறிவதற்கு அரிய மழை நெருக்கத்தில் உண்டென்றுநாம்துணியலாம். இவ்வெறும்புகளைப் பற்றிய மிகவும் அரிய ஆராய்ச்சி ஆர்தர் மீஇஸ் புக் ஆப்நாலெஜில் (Arthur Mee's,Book of Knowledge) காணலாம்.

எறும்புகளின்ராஜ்ஜியத்தைஉற்றுநோக்கின் நமது நூதன நாகரிக மேல்நாடும் தோற்றுவிடும்போலிருக்கிறது. குழந்தைகளைப் போஷிக்கும் சாலைகள் எத்துணை, வளர்க்கும் செவிலித்தாய்கள் எத்தனை, நமது ஆஸ்பித்திரிகள்போன்றசிகிச்சைச்சாலைகள்எத்தனை, பலதூரத்திலுள்ள எறும்புகளை விளிக்க ஏற்பட்டுள்ளன மார்க்கங்கள்எத்தனை, உணவுகளைச்சேகரிக்கும் போனகசாலைகள் எத்தனை, நமது பகுத்தறிவுக்கும் பன்மடங்காய் விளங்குகிற ஐக்கிய சங்கங்கள் எத்